

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஓம்

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்
கனேடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்** (ஐயாமணி)
(புங்குடுதீவு - 10)

(416) 266 3333




(416) 266 3333

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும், திருமணம் போன்ற மங்களகரமான வைபவங்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகட்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். இத்துடன் குறைந்த வாடகையில் ஸ்காபுரோ, ரொறன்ரோ இடங்களில் மண்டப வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

கல்யாண மண்டபம், மணவறை, பந்தல் அலங்காரம், பூமாலை, ஆண்டாள் மாலை, சடைநாகம், தலைப்பாகை, தலைநகை, பூஜைக்குரிய பொருட்கள் இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**628 E Birchmount Road, Scarborough, ON. M1K 1P9**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உள்ளே ☞


- நவீன ஓவியம் - 02
- வேட்டிகட்டி வேட்டுவைத்த ஜனாதிபதிகள் அன்று!.... (அரசியல் கட்டுரை) - 05
- 'விடுதலைக் காற்றுடன்....' (கவிதை) - 07
- 'ரோஜா மலரே நீ வாழி' (கவிதை) - 08
- இலக்கிய உறவுகள் (கட்டுரை) - 09
- 'இளைஞர் அணி' (சிறுகதை) - 13
- ராசுக்குட்டி அப்பா (நடைச்சித்தரம்) - 19
- கவிதைகள் - 22
- மொழியால் தமிழரா? பெயரால் தமிழரா? (கட்டுரை) - 25
- 'பாரமேற்றான்பரிசு கேட்டான்' (கவிதை) - 30
- சிறுவர் பூங்கா - 34
- நெஞ்சங்கள் (தொடர்கதை) - 39
- 'அவள்' (கவிதை) - 45
- நான் ஒரு கணவனாகிறேன் (சிறுகதை) - 46
- 'என் மண் எனக்கு வேண்டும்' (கவிதை) - 51
- சந்திப்பு - 54
- விளையாட்டு - 59
- சினிமா - 61
- சொற் சிலம்பம் - 64




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

ஈழத்தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் நம் எதிர்கால சந்ததியினர் தமிழ்மொழி, கலை, கலாச்சாரம், பண்பாட்டுக் கோலங்களில் இருந்து பிசகி அந்நியக் கலாச்சாரங்களில் மூழ்கி விடக்கூடாது என்பதில் மிகுந்த கவனமெடுத்து வருகின்றனர்.

குறிப்பாக கனடாவில் பத்திரிகைத் துறையினர் இத்தகைய முயற்சியில் முன்னின்று உழைத்து வருகின்றனர். கனடாவில் வாராந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், மாதாந்த தகவல் இதழ், காலாண்டு சஞ்சிகை, வருடாந்த சஞ்சிகைகள் எனப் பல வகையில் தமது பாணிக்கேற்ப மெருகூட்டி பத்திரிகைத்துறை தம்பணியைச் செய்து வருகிறது.

இவற்றில் குறிப்பாக 'ரோஜா' சஞ்சிகை தமது பணியை தரமாகவும், கலைநயத்து டனும், சிறுவர் முதல் முதியோர்வரை பயன்பெறத்தக்க வகையில் செய்து வருகின் றது. மற்றும் எழுத்தாளர்கள், இலக்கிய படைப்பாளிகள், கவிஞர்கள், கலைஞர்கள் அனைவருக்கும் களம் அமைத்துக் கொடுத்து அவர்களுக்குள் ஒளிந்திருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வருவதில் ரோஜா சஞ்சிகை முன்னிற்பதை யாரும் மறுக்க முடியாது. அத்துடன் ரோஜா இதழ் ஒரு சில வாரங்களுக்கு முன் பத்திரிகைத் துறையோடு மட்டும் நில்லாது சமூக சேவையிலும் ஈடுபட்டு சமூகத்துக்கும் தனக்கு முள்ள நெருங்கிய தொடர்பை நிலைநாட்டியது. 15.07.95 அன்று ஈழத்தின் தலைநகர் திருகோணமலையில் அமைந்திருக்கும் அன்பு இல்லம் அநாதைச் சிறுவர் இல்லத் திற்கு உதவு முகமாக நடத்தப்பட்ட நிகழ்ச்சியினை ஒழுங்கு செய்வதில் முன்னின்று உழைத்த பெருமை 'ரோஜா' இதழையும் சாரும். (இவர்களுடன் ஒன்றிணைந்த இளையநிலா குழுவினரும், ஹரன் கிறாப் நிறுவனத்தினரும் இத்தருணத்தில் பாராட்டப்பட வேண்டியவர்களே)

இவ்வகையில் சமூக சேவையில் காலடி எடுத்து வைத்து தம் சேவையை செவ்வனே செய்வதில் 'ரோஜா' முன்னிற்கின்றது. அதனது பணி தொடர்வதற்கு வாசக பெருமக் களும், வர்த்தகப் பெரு மக்களும் தாம் வழங்கிவரும் ஆதரவை மேலும் தொடர்ந்து வழங்கி ரோஜாவின் வளர்ச்சி தொடர்ந்து நடைபெற உதவுவதோடு மாத இதழாக வெளிவரும் ரோஜா வார இதழாக வெளிவர வேண்டும். அது வாசகர்களின் கைகளி லேயே உள்ளது. நிச்சயமாக வாசகர்கள் தமது ஆதரவை வழங்குவார்கள்.

கனடாவில் எதிர்கால சந்ததியும் தேமதுர தமிழை உலகமெல்லாம் பரவும் வகை செய்ய வேண்டும் எனும் நன்நோக்கோடு சேவை புரியும் ரோஜா இதழ் மென்மேலும் வளர்ச்சியடைந்து பத்திரிகைத் துறையில் தனித்துவம் மிக்கதாக மிளிர வாசகர்களா கிய உங்கள் அனைவர் சார்பிலும், என் சார்பிலும் நல்லாசியையும், நல்வாழ்த்துக் களையும் கூறி ஈழத்தில் நடைபெறும் போர்ச் சூழலில் பாதிப்படைந்த எம் உடன் பிறப்புக்கள் அனைவரும் நிம்மதியுடனும், சுபீட்சத்துடனும் இன்னல்களின்றி வாழ வேண்டுமென கனடாவாழ் தமிழ் மக்கள் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப் போமாக. அத்தோடு பாதிப்புற்ற அனாதைச் சிறுவர்கள் தொகை நாளுக்குநாள் பெருகி வரும் இவ்வேளை மனித நேயத்துடன் உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சுபம்

இப்படிக்கு

**பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**

ஸ்ரீ கௌரி மங்கள சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த நவீன ஓவியத்திற்குள் ஒரு கவிதை புதைந்துகிடக்கிறது.
கவிதைக்கு பக்கம் ஏழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

கனடாவில் வாழும் இளைய தலைமுறையினர் மத்தியில் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து போகும் எம் தாய்மொழியாம் தமிழ்மொழியை வளர்ப்பதற்காகவும், புதிய கலைஞர்களையும், எழுத்தாளர்களையும் உருவாக்குவதற்காகவும் காலாண்டு மலராக மலர்ந்த இந்த 'ரோஜா' மலர் இரண்டாவது ஆண்டினைக் கடந்து மூன்றாவது ஆண்டில் காலடி வைக்கின்றது. 'ரோஜா' வளர்ந்து வருகின்ற ஒரு சஞ்சிகை. இந்நிலையில் ரோஜாவின் வளர்ச்சியில் எழுத்தாளர்கள், கலைஞர்கள், அறிவுரையாளர்கள், வாசகர்கள், விளம்பர தாரர்கள் ஆகியோரின் பங்கு பாராட்டுக்குரியது.

- முதலில் இந்த ரோஜா சஞ்சகையை வெளியிடுவதில் என்னுடன் துணை நின்ற நண்பன் திரு. லிங்கேஸ் (சுரேஷ்) அவர்களுக்கும்,
- ரோஜா சஞ்சிகையின் வளர்ச்சியில் முக்கியமாக தங்களது நேரத்தைப் பொருட்படுத்தாது தொடர்ச்சியாக ஆக்கங்களைத் தந்துதவும் B. R. றஞ்சனி, நிலா குகதாசன், சுரேஷ், சீனிவாசன் (வாசு), கவிஞர் வி. கந்தவனம், டொன்மில்ஸ் சிவப்பிரகாசம், சிவா சின்னத்தம்பி, சோதிட கலாநிதி ஜெயா கந்தையா, எஸ். ஜெகதீசன், எஸ். பாலச்சந்திரன், உதாசனன், தமிழருவி ந. சந்திரமோகன் இவர்களைத் தவிர பல புதிய எழுத்தாளர்களுக்கும்,
- ரோஜா சஞ்சிகையின் அட்டை வடிவமைப்பு பலராலும் பேசப்படும் ஒன்றாகும். நவீன தொழில் நுட்பத்திலும் கணணி தமிழ் எழுத்துக்களை உருவாக்குவதிலும் கைதேர்ந்த நண்பர் சசி பத்மநாதன் அவர்களுக்கும்,
- அறிவுரைகள் தந்து ரோஜா சஞ்சிகையின் வளர்ச்சிக்காக உதவும் கவிஞர் வி. கந்தவனம், எஸ். திருச்செல்வம், எஸ். ஜெகதீசன், சிவா சின்னத்தம்பி, கலகலப்புத் தீசன், சசி பத்மநாதன், நிலா குகதாசன், கருணா என்று பட்டியல் நீண்டு கொண்டே போகும். இவர்கள் அனைவருக்கும்,
- இரவு பகலென்று சில வேளைகளில் உறக்கமில்லாது தயாரிப்பு, அச்சமைப்பிலும் உதவிவரும் லவானந்த் அனுஷியாவிற்கும்,
- ஓவியர்களுக்கு முக்கிய இடத்தை ரோஜா கொடுத்து வருகிறது. செல்வி. ரூபி, திருமதி. ச. சுகந்தி, நவீன ஓவியரும் ரோஜாவின் படப்பிடப்பாளருமான கருணா இவர்கள் அனைவருக்கும்,
- ரோஜாவில் விளம்பரம் செய்து ரோஜாவின் வளர்ச்சிக்கு உதவிய விளம்பர தாரர்களுக்கும்,
- ரோஜாவினை அச்சமைத்த குவாலிற்றி பிறின்ரிங், ரிவிலா பப்ளிக்கேஷன்ஸ், பரடைஸ் அச்சகத்தினருக்கும்,
- ரோஜா இதழ் வெளிவந்தவுடன் தங்கள் வானொலி, பத்திரிகையில் விளம்பரம் செய்துதவிய 'ரேடியோ ஆசியா' M. P. கோணேஸ், பத்மினி கோணேஸ், எஸ். பாலச்சந்திரன், 'கீதவாணி' நடா ஆர். ராஜ்குமார், 'சங்கமம்' இளையபாரதி, 'சூரியன்', 'தமிழர் தகவல்' ஆசிரியர்களுக்கும்,
- ரோஜாவின் முதலாவது இதழை வெளியிட உதவிய எஸ். மதிவாசன், ரம்யா பிறின்ரிங் ஸ்தாபனத்தார், 'E. S. K நகைமாளிகை' K. S. ராஜா ஆகியோருக்கும்,
- ரோஜாவின் வளர்ச்சியில் முக்கிய பங்கை வகிக்கும் வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும்,

** எனது இதய நன்றிகள் **

~ ஆசிரியர் ~


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டிகட்டி வேட்டுவைத்த ஜனாதிபதிகள் அன்று! சேலைகட்டி 'முன்பாயும்' ஜனாதிப்தி இன்று!



தமிழருவி
**ந. சந்திரமோகன்**

தற்போது இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்கள் பரிதாபகரமான நிலையையே ஏற்படுத்துகின்றன!

அப்பாவி பொதுமக்கள் நூற்றுக்கணக்கில் மறைந்து விட்டார்கள்!

தலைசிதறி மாண்டு போனார்கள், 'ஷெல்' அடிகளினால் அங்கங்களை இழந்தவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரை விட்டவர்கள் அப்பப்பா......!

பலாலிக்குள் இருந்த சந்திரிகா இராணுவம் 'முன்னோக்கிப் பாய்கிறதாம்'!

'முன்னோக்கிப் பாயுங்கள், ஏன் அப்பாவிகள் மீது பாய்கிறீர்கள். தங்கள் உயிர்களை காப்பாற்றிக் கொள்வதற்காக, தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி 'சேர்ச்சு' களிலும், கோவில்களிலும் தஞ்சம் அடைந்த அப்பாவிகளின் தலையில் குண்டுகளைப் பொழியலாமா? ஏழை சிங்களச் சிப்பாய்கள்மேல் சவாரி விட்டுவந்து, தமிழர்களைக் கொன்று குவிக்கின்றார் சந்திரிகா!

இரத்தம் ஆறாக ஓடுகின்றது!
அம்மா சந்திரிகா.......!

அன்று வேட்டிகட்டிய ஜனாதிபதி கள் ஜே. ஆர், பிரேமதாசா, டி. பி. விஜயதுங்கா ஆகியோருக்கு நடந்தவைகள் என்ன?

அவர்கள் தமிழர்களைக் கொன்று குவித்து நடந்துவிட்டவைகள் என்ன?

அவர்கள் இன்று எங்கே?

செல்லாக் காசுகளாக மூலையில் முடங்கிக் கிடக்கின்றார்கள்! அண்மைக்கால சரித்திரங்களைக் கூட உணராதவராக உள்ளாரே சந்திரிகா!

'சமாதானம்.... சமாதானம்.....' என்று பாசாங்கு செய்த சந்திரிகா இன்று பேரினவாதிகளின் கூக்குரல் களுக்கு செவிசாய்க்கின்றார்!

அரசாங்கத்திற்குள்ளேயே இனவாதிகளின் கையே ஓங்கியுள்ளது!

"இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படைகளைக் குவித்து வைத்து என்ன செய்கிறீர்கள்? தேவையான நேரம் அமைதியாக விடுதலைப் புலிகள் உங்கள் மேல் பாய்ந்து தங்கள் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள்" என்ற பேரினவாதிகளின் குமுறல், இலங்கை அரசை 'முன்னோக்கிப் பாயத்' தூண்டுகிறது.

மூன்றாம் கட்ட ஈழப்போரில், விடுதலைப் புலிகள் நடத்தியுள்ள தாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல்கள் ஸ்ரீலங்கா யுத்த இயந்தித்தையே ஆட்டம் காண வைத்த தெனலாம்.

இதன் காரணமாக அரசின் இரா ணுவ இயந்திரத்தின் செயற்பாடுகள் பற்றி இலங்கையில் மட்டுமல்ல, சர்வதேச ரீதியிலும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

அண்மைக் காலத்தில் இலங்கை இராணுவம் தொடர்ச்சியாக பல தோல் விகளை விடுதலைப் புலிகளிடம் சந் தித்து வந்ததன் காரணமாக, சிங்கள மக்கள் தமது இராணுவத்தினர் மீது நம்பிக்கை இழந்தேயுள்ளனர்!

இலங்கை இராணுவம் அண்மைக் காலங்களில் பெற்றுள்ள நவீன ஆயுதங்கள் மட்டும் விடுதலைப் புலி களை வெற்றி கொள்ள உதவுமா?

இல்லை.....!

இராணுவக் கட்டமைப்பிலும், ஆயுதப் படையின் தலைமையிலும் கொண்டு வரப்பட வேண்டிய மாற்றங்கள், போருக் கான புதிய மூலோபாயங்களையும், யுக்திகளை யும் வகுத்தல் என்பது முக்கிய மாக இன்று தென்னிலங்கைப் பத்திரிகைகள் சுட்டிக்காட்டும் காரணி களாகும்.

மூன்றாம் கட்ட ஈழப்போரில் ஏற்பட் டுள்ள புதிய பரிமாணமானது வடக்கு-கிழக்கு போர் முனை குறித்து புதிய தொரு போருபாயத்தை இராணுவத் தரப்பு வகுக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

பேரினவாதிகளை திருப்தி செய்யும் நோக்கில், அகம்பாவம் கொண்டு முன் னோக்கிப் பாயும் சந்திரிகா, பாவம்...... விழுந்தெழும்பப் போகின்றா?

முன்பு முருங்கை மரத்தில் ஏறிய எத்தனையோ வேதாளங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன.

இன்று வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியுள்ளது!

இறங்கி ஓடிவிடும் என்பது தெரிந்தா லும், அதுவரையும் அப்பாவிகளான பொதுமக்களின் உயிர்கள் பாதுகாக் கப்பட வேண்டும்!

இலங்கை அரசின் இனப்படுகொலை யைக் கண்டித்து குரல் கொடுப்போம். சர்வதேச ரீதியாக எமது பங்களிப்பை செய்வோம்!

பறிக்கப்படும் எமது மக்களின் உயி ரைப் பாதுகாப்போம்!

சிந்தப்படும் அப்பாவித் தமிழர்களின் இரத்த ஆறுக்கு முற்றுப் புள்ளி வைப்போம்!

சர்வதேச ரீதியாக நாம் எந்தெந்த நாடு களில் வாழ்கின்றோமோ, அந்தந்த நாடுகளில் உள்ள அரசுகளை நாம் அணுகுவோம்! ஈழத்து இனப் படு கொலைக்கு முற்றுப் புள்ளி வைக்கு மாறு வேண்டு வோம்! எமது மக்களின் அவலைக் குரலை சர்வதேச ரீதியாக தடுப்பதற்கு ஆவன செய்வோம்.

கனடாவில் வாழ்கின்ற நாமும் செத்து மடியும் எமது சொந்தச் சகோதரர்களுக் காக குரல் கொடுப்போம்.

எட்டுத் திசைகளும் பட்டுத் தெறித்தன
ஈனர் குண்டுகளே! - குண்டு
பட்டுத் தமதுடல் கெட்டுச் சிதறிடப்
பாய்ந்தார் சகோதரர்களே!

★★★★★

ஹரன் கிறாப்
(905) 277-8613



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைக் காற்றோடு கலந்து சென்றது.....

கருணா

எங்கும் மரண ஓலம்
மனிதத் துண்டங்கள்.....
இறைக்கப்பட்ட குண்டுகளுக்கு
இரையாகி தலைகளைத் தொலைத்த
மனிதர்கள் மலையாகிக் கிடந்தனர்
பொங்கிப் பெருகிய குருதிப் புனல்
ஆலய முகடுகளில் அநியாய
வரைபடம் வடித்திருந்தது.....
புக்காராப் புல்லர்களுக்கு
பச்சைக் குழந்தையும்
பயங்கரவாதியாய்த் தெரிந்ததோ....
மண்டைகள் பிளந்து போய்
அவையங்கள் அடியோடு மாறிப்போய்
அவைகூட அரிச்சுவடியுடன்
அழிக்கப்பட்டிருந்தன.
சமாதானம் சந்திரிகா என்று
வெள்ளைக் கனவுகளில் வீற்றிருந்தவர்கள்
வந்த சேதியுடன் வியர்த்துப் போனார்கள்
அழுகைகள், சாபங்கள் ஓலங்கள், ஒப்பாரிகள்
அடங்காத் தீயாய் மாறி
விடுதலைக் காற்றோடு கலந்து சென்றது.....
அதனால்தான் அடுத்தடுத்த நாட்களிலேயே
அவை கீழிருந்து புயலாகி மேலெழுந்து
புக்காராவை பதம் பார்த்ததுவோ! அது
பல்வேறு துண்டாகி பரிதாபமாய்
பூமியில் படுத்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ரோஜாவே நீ வாழி

~ சிவா. சின்னத்தம்பி

இன்பத்தமிழிதழோ இனியநல்
எழில்மிகு மகரந்தச் செவ்விதழோ
அன்புத்தமிழினியர்க்கு ஆறுதல் தரும்
அறிவொளிரும் புதுமலரோ தமிழர்க்கு
தென்பு தரும் தேன் மலராய்
திகழ்கின்ற திருமலரோ
இலக்கிய வாசனையை இரம்மியமாய்
அள்ளித்தரும் அற்புதத் தமிழ் மலரோ!
ஆசையெனும் வாசனையை
அனுபவிக்கக் காத்திருக்கும்
இளைய தமிழ் வாசகரின்
அர்ச்சனைப் பூவிதழோ
அழகின் சிகரமாய்
ஈழத்தமிழ் மண் வாசனை இனிக்க
இணையற்ற கலசத்தை
அலங்கரித்துக் கொள்கின்ற
உயிருள்ள 'ரோசா' நீ
கலை இலக்கிய மாசிகையாய்
கனடா மண்ணில் மலர்ந்தே இன்று தமிழ்
நிலை உயர்த்தி நிம்மதியாய் கமழ்ந்தாலும்
விலை குறைந்த ரோஜாவல்ல நீ
விலை மதிப்பற்ற ரோஜா
விரிந்து வளர்ந்து விளைந்து முதிர்ந்து வரும்
வர்ணங்கள் நிறைந்த வாசமுள்ள ரோஜா உன்
வரவை எதிர்பார்த்து உலகத் தமிழினமே
வழிமீது விழிவைத்துக் காத்திருக்கிறது
ஆனந்தம் அரும்பி அன்றாடம் மொட்டாகி
ஒவ்வோர் திங்களும் ஏகாந்தமாய் மலர்ந்து
ஈராண்டு ஓடி மறைந்திட்டாலும் நீ
நூறாண்டுகள் மலர்ந்து நுகர்வோருக்கு
நாரோடு சேர்ந்து நறுமலராகி
நம்மோடு நாள்தோறும் நீ இணைந்துவிடு
நாமெல்லோரும் நறுமணம் பெறுவோம்
நல்'ரோஜாவே' நீடூழி நீ வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் வி. கந்தவனம் அவர்களின்

# இலக்கிய உறவுகள்

## பேராசிரியர். பூ. ஆலாலசுந்தரம் அவர்கள்

சென்னை கிறித்தவக் கல்லூரி.

பண்பாளர் கல்லூரி என்று இதற்கு ஒரு சிறப்புப் பெயர்.

தாம்பரத்தின் தண்ணிழலில் ஒப்பற்ற உயர்கல்வி ஊட்டிவரும் இச்சர்வதேசக் கல்லூரி, டாக்டர் பாயிட் அவர்களின் தலைமையில் வெகு சிறப்பாக இயங்கிய காலம் நான் படித்த காலம் (1954-56)

பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் அவர்கள் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தார். அடக்கமானவர்; ஆழமான அறிஞர். இவர் எழுதிய நூல் ஒன்று கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் பாடபுத்தகமாகவும் வைக்கப் பட்டிருந்தது.

செட்டியார் அவர்கள் கவர்ச்சியானவோர் ஆசிரியர் என்று சொல்லமுடியாது. இவரிலும் எடுப்பான குரல் வளம் வாய்ந்த விரிவுரையாளர் திரு. வேலாயுதம் அவர்கள் புறநானூறு முதலாய பழைய இலக்கியங்களை மிக உற்சாகத்துடன் படிப்பித்தார். ஆயினும் பேராசிரியரது கற்பித்த முறையிலிருந்த இயற்கைத் தன்மையும் அமைதியும் என்னை வெகுவாகக்கவர்ந்தன. பரீட்சைக்காகப் படிப்பிப்பதிலும் பரந்துபட்ட அறிவை வழங்குவதே அவரின் நோக்காக இருந்தது. அவருக்கும் எனது ஈழத் தமிழ் நன்கு பிடித்துக் கொண்டது. இதனால் எமக்கிடையே நல்ல உறவு வளரலாயிற்று.

கந்தவனம் என்ற பெயரே அவருக்குப் புதுமையாக இருந்தது. தமிழ் நாட்டில் இப்படிப்பெயரே இல்லையாம்.

இரண்டு தடவைகள் எனது கட்டுரைகளை மிகச் சிறந்தனவாகத் தெரிவு செய்து அவற்றை வகுப்பில் வாசித்துக் காட்டி விமர்சித்திருக்கின்றார். ஒரு கட்டுரையில் நான் பயன்படுத்தியிருந்த கமம்', 'கடும்பு' ஆகிய சொற்களுக்கு விளக்கம் கூறி, அவ்வரிய சொற்கள் தமிழகத்தில் வழக்கொழிந்து விட்டன என்று வருத்தப்பட்டார். அதுபோலவே மற்றொரு சந்தர்ப்பத்தில் 'பையப் பைய', 'கதைத்தல்', 'வில்லங்கம்' ஆகிய சொற்களை ஏனைய மாணவர் களுக்கும் அறிமுகப்படுத்தினார். கம்பராமாயணத்தில் வரும் 'பையப் பைய நடந்தார்' என்ற தொடரை உதாரணம் காட்டி, தமிழ் நாட்டில் மறைந்து விட்ட அரிய இலக்கியச் சொற்கள் ஈழத்தில் இன்றும் வழக்கில் உள்ளன என்பதை அவர் எடுத்துக் காட்டியபோது எனக்குப் பெருமையாக இருந்தது.

செட்டியார் அவர்களுடைய வகுப்புகளில் நாகரிகமான நகைச்சுவை இழையோடும். அங்கதச் சுவை அடிக்கடி தலை காட்டும். உரைநடை படிப்பிக்கையில் பிரபல எழுத்தாளர் கு. ராஜவேலு அவர்களின் தமிழ் செயற்கையானது என்பதனைக் காட்ட 'நக்கல்' அடிப்பார். ராஜவேலு அவர்களுடைய வசனங்களில் அடுக்கு மோனைகள் வரும். ஆனால் பல இடங்களில் அவை வேண்டுமென்று புகுத்தப்பட.டவைபோல இருக்கும். அத்தகைய இடங்களில்' கானா இங்கே கண்ணீர் விடுகிறது', 'வாவன்னா வாடிக் கிடக்கிறது' என்பன போன்ற 'குத்தல்கள்' செட்டியாரிடமிருந்து வரும்.

கவிதைக்கேயுரிய எதுகை மோனைகளை அண்ணா, கலைஞர் போன்றவர்கள் வசன நடையில் கையாண்டு மக்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ந்து கொண்டிருந்த காலமது. அண்ணாத்துரை அவர்களின் "வேலைக் காரி", கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் "தூக்குமேடை" முதலாய ஆக்கங்கள் வெற்றி பெற்றமைக்கு சீர் திருத்தக் கருத்துக்கள் மட்டும் காரணம் என்று சொல்லிவிட முடியாது. அவர்கள் கையாண்ட எதுகை மோனைகள் நிறைந்த வசன நடைக் கவர்ச்சியும் ஒரு காரணமாகும். சந்தர்ப்பங்களுக்கேற்பச் சொற்களைத் தெரிவு செய்வதோடு கருத்துத் தெளிவிலும் அவர்கள் கவனம் செலுத்தினார்கள். எதுகை மோனை களுக்காகச் சொற்களை வலிந்து தேடிப் பிடித்து இழுப்பதால் கருத்துக் குழப்பம் ஏற்படுவதோடு இயல்பான இனிமையும் கெட்டு விடுகிறது. செட்டியார் வலியுறுத் திய இக் கருத்துக்களை நான் என்றும் மறந்ததுமில்லை, பிற்காலத்தில் எனது கவிதைகளில் வேண்டாத சொற்களுக்கு விருந்து வைத்ததுமில்லை.

கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேரவை மிகவும் சக்தி வாய்ந்த ஒரு சங்கம். கல்லூரியில் மட்டுமல்லாது சென்னை மாநகரத்துப் பிற கல்லூரிகளிலும் இதன் பெயர் அடிபடும். பெயர் பெற்ற இப் பேரவையின் நிர்வாக சபையில் இடம் பிடிக்கப் பலரும் ஆர்வுடன் போட்டியிடு வர். 1955-56ம் ஆண்டுக்குரிய நிர்வாக சபைத் தேர்தலில் துணைச் செயலாளர் பதவிக்குப் போட்டியிட்டேன். ஈழத்து நண்பர்கள் T. தில்லைநாதன், R. சிவ-நேசன், நா. பரமேஸ்வரன், தமிழ் நாட்டு அன்பர்கள் R. பார்த்தசாரதி, S. ரங்கநாதன் ஆகியோர் என் பொருட் டுக் கடும் பிரசாரத்தில் இறங்கினார்கள். கடைசியில் ஒரு வாக்கால் வெற்றி பெற் றுச் சாதனை ஏற்படுத்தினேன். தேர்தல் அதிகாரி பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் கட்டித் தழுவி வாழ்த்துக் களைத் தெரிவித்தார்.

பேரவை நடத்தும் கூட்டங்களுள் பொங்கல் விழா பிரசித்தி பெற்றது. பிற கல்லூரி களுக்கும் அழைப்பு அனுப்பப்படும். 1956ம் ஆண்டுப் பொங்கல் விழாவை நடத்தும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக் கப்பட்டது. செயலாளர் சுகவீனமுற்றி ருந்தமை காரணமாயிற்று. பொங்கல் விழாவிற்குச் சிறப்பு விருந்தினரை ஒழுங்கு செய்யும் பொறுப்பு செயலாள ருடையது. எனினும் பேராசிரியருடன் ஆலோசனை செய்தேன். கனம் இராஜாச் செட்டியார் அவர்களை அழைப்பதென முடிவு செய்தோம். இவர் தமிழ் இசை வளர்ச்சிக்கு கல்லூரி எழுப்பிய அண்ணாமலைச் செட்டியாருடைய மகன். 'நீங்க போனா அவங்க அழைப் பைப் பொருட்படுத்தாமல் விடவும் கூடும்; அதனால் நானும் கூட வருகிறேன்', என்று பேராசிரியரும் என்னுடன் வந்தார்.

இராஜாச் செட்டியார் அவர்களுடைய வீடு பெரிய அரண்மனை. சிற்ப சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த கலைக் கோயில். செய்தி கேட்டு இராஜாச் செட்டியார் அவர்கள் மேல்மாடியி லிருந்து வந்தார். அவரும் எனது பேராசிரியரும் நெருங்கிய நண்பர்கள் என்பது அவர்களுடைய உரையாடலி லிருந்து தெரிய வந்தது. எனினும் எமது விழாநாள் அன்று அவருக்கு வேறு அலுவல் ஒன்று. அடுத்தடுத்த நாட்களி லும் அவரது நாட்குறிப்பேடு நிகழ்ச்சி களால் நிரம்பியிருந்தது. 'அடுத்த வருடம் பார்க்கலாம்' என்று ஆறுதல் சொன்னதோடு, தனது வாகனத்தில் எம்மைக் கல்லூரிக்கும் அனுப்பி வைத்தார்.

பேராசிரியர் தனது வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்று விருந்திட்டு மகிழ்ந்தார். விருந்து முடிவில் இரா. நெடுஞ்செழியன் அவர்களை விழாவுக்கு அழைக்கும் விருப்பத்தைத் தெரிவித் தேன். சிறுபொழுது மௌனம் சாதித் தார். அதற்குரிய காரணம் எனக்குத் தெரியாமல் இல்லை. கல்லூரி நிர்வா கத்துக்கு தி.மு.க பற்றி நல்ல அபிப்பிரா யம் இருக்கவில்லை. கிறித்தவக் கல் லூரி மட்டுமல்லாது பல கல்லூரிகள் தி.மு.க பேச்சாளர்களைத் தவிர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிய காலமது. அவர்கள் புரட்சிக் காரர்கள்; ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் கட்சியைத் திட்டுவார்கள்; அதனல் வீண் பிரச்சனைகள் ஏற்படும் என்ற உட்பயம். ஆனால் இவைபற்றிப் பேராசிரியர் வெளிப்படையாக ஒன்றும் சொல்லவில்லை. 'முயற்சி பண்ணிப் பாருங்க; அரசியலைத் தவிர்க்கும்படி கொஞ்சம் சொல்லி வையுங்க' என்று கூறி வழியனுப்பி வைத்தார்.

அடுத்தநாளே இரா. நெடுஞ்செழியன் அவர்களைப் பொங்கல் விழாவுக்கு ஒழுங்கு செய்தேன். விழாவன்று நானே அவரை அழைத்துவரச் சென்றிருந்தேன். உரிய நேரத்துக்குப் புறப்படத் தயாராக இருந்தார். பிரயாணஞ் செய்கையில் இலங்கையைப் பற்றிப் பேச்சு எடுத்தார். தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரம், கல்வி வசதிகள் பற்றி விசாரித்தார். பின்பு தி.மு.க கொள்கைகள் பற்றிச் சில கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். அவரது விளக்கங்கள் எளிமையாகவும் ஏற்கக்கூடியதாகவும் இருந்தன. தி.மு.க அறிஞர்கள் சொல்வதைத் தெளிவாகவும் அழுத்தமாகவும் சொல்லும் வல்லமை படைத்தவர்கள்.

நேரம் நெருங்க நெருங்க எனக்குள் ஒரு பயம் தலையெடுக்கத் தொடங்கியது. இவர் அரசாங்கத்தைத் தாக்கிப் பேசினால் என்பாடு வில்லங்கமாகி விடும். பேராசிரியரும் குறைப்பட்டுக் கொள்வார். நிர்வாகம் விசாரணைக்குக் கூட அழைக்கலாம். நெஞ்சு படபடத்தது. 'தயவு செய்து அரசியல் பற்றிப் பேசாது, இலக்கியம் பற்றி ஏதாவது பேசினால் நன்றாக இருக்கும்' என்று சொல்ல நினைத்தேன். அந்தப் பெரிய அறிஞருக்கு இந்த வேப்பங்குச்சி நிபந்தனை விதிப்பது முறையாகாது என்று வாயை மூடிக் கொண்டேன்.

துன்பம் உறவரினும் செய்க துணவாற்றி
இன்பம் பயக்கும் வினை

என்ற திருக்குறள் சற்றுத் தென்பு அளித்தது.

இருவரும் கல்லூரியின் பிரதான வாயிலில் வந்திறங்கியபோது "நாவலர் வாழ்க" எனும் வாழ்த்தொலி வானைப் பிளந்தது. மாணவர்கள், கூட்டம் நடைபெற்ற அண்டேர்சன் மண்டபம் வரை அணிவகுத்து நின்று நாவலரை வரவேற்ற காட்சி மறக்க முடியாததொன்று.

நாவலர் அரசியலைத் தொடவுமில்லை; அரசாங்கத்தைத் தாக்கவுமில்லை. தனக்கேயுரிய பெருந் தன்மையோடு காலமும் இடமும் கருதிக் கல்வி பற்றி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்பது அவரது முடிவுரையின் சாரமாக இருந்தது.

நன்றியுரை கூறுகையில், 'சென்னைக் கிறித்தவக் கல்லூரிக்கு முதன் முதலாக வருகை தந்த தி.மு.க. அறிஞர் நாவலர் அவர்களே. அந்த வகையில் இந்த விழா வரலாற்றுப் புகழ் பெற்றிருக்கின்றது' என்று நான் குறிப்பிட்டதும் எழுந்த கைதட்டலை நிறுத்தப் பேராசிரியர் கைகாட்ட வேண்டியிருந்தது.

விழாவின் முக்கியமான கட்டம் விரும்பியவாறு நிறைவேறியது குறித்துப் பேராசிரியருக்குப் பெரு மகிழ்ச்சி.


இவ்விதம் பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரம் அவர்களின் தலைமையிலும் வழிப்படுத்தலிலும் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் சில இலக்கியச் சலசலப்புக்களை ஏற்படுத்த நேர்ந்தது. நாடகச் சாதனைகளை வேறாகப் பேசவொரு வேளை வருமென நினைக்கின்றேன்.

★★★★★

தமிழன்
வழிகாட்டி
(416) 289-8900
'ரோஜா' Ex. 5569



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜூலை 17ம் திகதி ரொறன்ரோவில் 'விழிப்பு' போராட்டம்
5,000க்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்

படம்: 'எஸ்தி'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1983 ஏப்ரல் மாதத்தில், இலங்கை இராணுவத்தின் அராஜகங்களைக் கண்டிக்கும் முகமாக திருமலையில் வரனின் பாடசாலையில் முற்போக்கு எண்ணம் கொண்ட மாணவர்கள் சிலரினால் மாணவர் அமைப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. மணி, நாதன், வரன், காந்தன், ராஜு உட்பட 12 மாணவர்களே இந்த அமைப்பில் இருந்தனர்.

தமிழீழப் பகுதிகளிலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைப் படுத்தப்படுவதைக் கண்டிக்கும் முகமாக இம் மாணவர் அமைப்பினால் ஒரு கிழமை பாடசாலை பகிஷ்கரிப்பதாகவும், 5ம் நாள் வெள்ளிக்கிழமை மாபெரும் ஹர்த்தால் நடத்துவதாகவும் முடிவு செய்யப்பட்டது. சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. வரன் மாணவ தலைவன் என்பதால் தனது பாடசாலை மாணவர்களையும், ஆசிரியர்களையும் இதற்கு ஆதரவு தரும்படி கேட்டுக் கொண்டான்.

திங்கட்கிழமை பாடசாலை பகிஷ்கரிப்பு ஆரம்பமானது. காலை 7 மணியிலிருந்து மணி, நாதன், வரன், காந்தன், ராஜு ஐவரும் சைக்கிளில் வீதி வீதியாகத் திரிந்து பாடசாலை செல்லும் மாணவர்களை வீட்டிற்குத் திருப்பினர். மற்றைய பாடசாலை மாணவ தலைவர் தலைவியருடன் கதைத்து மாணவர்களுக்கு இந்தப் பகிஷ்கரிப்பின் முக்கியத்துவத்தினை எடுத்துரைத்து முக்கிய பங்கை வழங்குமாறு கேட்டுக் கொண்டனர்.

முதல்நாள் பெரியளவில் வெற்றியளிக்காவிட்டாலும் திருமலையில் முதன் முதலாக மாணவ சமுதாயம் ஒன்றுபட்டு எம்மினத்திற்கு இனவெறி அரசினால் கட்டவிழ்த்து விட்ட அராஜகங்களைக் கண்டித்தது.

இரண்டாம் நாள் எதிர்பாராத வெற்றி கிடைத்தது. ஒரு மகளிர் (கொன்மென்ட்) பாடசாலை தவிர்ந்த அனைத்துப் பாடசாலை மாணவர்களும் பெரும் பங்கெடுத்து தமது வீதிகளில் நின்று பாடசாலைக்குச் சென்ற மாணவர்களைத் திருப்பி அனுப்பினர். கொன்மென்ட் மாணவிகள் மாத்திரம் மாணவர்கள் சொன்னதையும் தட்டிக் கழித்து விட்டு பாடசாலைக்குச் சென்றனர். மாணவர்களுக்கு கடைசி நாள் (வெள்ளிக்கிழமை) ஹர்த்தால் வெற்றிகரமாக அமையவேண்டுமென்ற எதிர்பார்ப்பு மேலோங்கி நின்றது.

~ திருமலை செல்வன் ~

"மணி, 'கொன்மென்ட்' பிள்ளைகளை எப்படி வீட்டிற்கு விரட்டுவது" என்றான் ராஜு

"ராஜு" இன்றைக்கு பாடசாலைக்குள் போய் ஆசிரியர்களிடம் எமக்கு ஒத்துழைப்புத் தருமாறு கேட்போம்......'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மணி இவளவைக்கு பொலிஸ் ஸ்டேசன் முன்னால் இருக்கு என்ற துணிவு தாண்டா" கோபப்பட்டான் ராஜ".

"அவசரப்படாத ராஜ"....., கோபப்படுவது நல்லதில்லை; சிந்தித்து செயல் படுவதுதான் நல்லது"; "மணி......., ஹர்த்தால் துண்டுப் பிரசுரங்களை வியாழக்கிழமை கொடுக்கலாம். கொஞ்சத்தை உனது வீட்டிலும் மிகுதியை எனது வீட்டிலும் வைப்போம்" என்றான் வரன்.

"ராஜ" நீயும் காந்தனும் போய் கடைத் தெருவில் தமிழ், முஸ்லிம் கடைகள் எல்லாவற்றையும் வெள்ளிக்கிழமை திறக்க வேண்டாம் என்று சொல்லுங்கள். நாளை 7 மணிக்கு சிவன் கோயிலுக்கு முன்னால் சந்திப்போம்" என்று மணி சொல்லிக் கொண்டு சைக்கிளில் ஏறினான். "வரன் நீ வீட்ட போய் துண்டுப் பிரசுரங்களை வை நான் 'கொன்மென்'டுக்கு போய் ஆசிரியர்களுடன் கதைத்து விட்டு வீட்டிற்குப் போகிறேன்" மணி சைக்கிளில் கிளம்பினான்.

மூன்றாம் நாள் புதன்கிழமை காலை வீரகேசரி வாங்குவதற்கு முற்றவெளியிலுள்ள கடைக்குச் சென்றிருந்தான் வரன் "தம்பி நேற்றிரவு கல்வித் திணைக்கள ஜீப்பிற்கு நெருப்பு வைத்து விட்டார்களாம்....." என்றார் கடைக்காரர்.

வரனுக்கு சற்று அதிர்ச்சியாகவும் பயமாகவும் இருந்தது. வரன் எதையும் காட்டிக் கொள்ளாதவாறு....... "அண்ண வெள்ளிக்கிழமை ஹர்த்தால் தெரியும்தானே. கடையைத் திறக்காதைங்கோ" என்று சொல்லிக் கொண்டிருந்த வேளை குண்டு வெடித்துச் சத்தம் கேட்டது. பலரும் பலவாறு கதைத்துக் கொண்டு அவசரமாக வீட்டிற்கு ஓடினர். வரன் வீட்டிற்குப் போகும்போது தனது வீட்டு வாசலில் கூடி நிற்பவர்கள் "பொலிஸ் ஸ்டேசனுக்கு குண்டு வைத்திட்டாங்கள்" என்று கதைத்துக் கொண்டிருப்பதை காதில் வாங்கிக் கொண்டு என்ன எல்லாமே எதிர் பாராமல் நடக்குது, ஹர்த்தால் துண்டுப் பிரசுரங்கள் கொடுக்க வேண்டுமே, இனி எப்படி வெளியில் திரிவது என்று மனதைக் குழப்பிக் கொண்டிருந்தான். அச்சமயம் "வரன் நீ இண்டைக்கு ஒரு இடமும் போக வேண்டாம்" என்று உத்தர விட்டார் தாயார்.

சற்று நேரம் கழித்து "வரன்....... வரன்" மணி கூப்பிடும் சத்தம் கேட்டது.

"மணி என்ன மச்சான்......, என்ன நடக்குது....."

"வரன் நேற்று யாரோ தெரியவில்லை கல்வித் திணைக்கள ஜீப்பை எரித்துப் போட்டாங்கள். அதனால் உவர் மலை முழுக்க Police, Army, Navy எல்லாம் சேர்ந்து வீடு வீடாகச் சோதனை நடத்துகிறார்கள். நான் துண்டுப் பிரசுரங்களை என் வீட்டிற்கு முன்னால் நிற்கின்ற தென்னை மரத்திற்குள் ஒழித்து வைத்து விட்டு வந்தேன்.

"என்ன மணி சொல்கிறாய் உன்னுடைய வீட்டிற்குப போய அதை எடுத்துக் கொண்டு வருவம்...... அது சரி மச்சான் எங்க குண்டு வெடித்தது"

"எனக்கும் சரியாகத் தெரியவில்லை வரன்"

சரி மச்சான் முதலில் துண்டுப் பிரசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்களை உன்னுடைய வீட்டிலிருந்து எடுக்க வேண்டும்" இருவரும் புறப் படவும் காந்தன் வந்தான்.

"காந்தன் என்ன நடந்தது? எங்க....." வரன் முடிப்பதற்குள்.....

"இவன் ராஜு" நேற்றைக்கு கடைக் காரனிடம் சொன்னவன்டா வெள்ளிக் கிழமை கடை மூடிப்போடுங்கோ வியாபாரத்தைப் பார்த்துத் திறந் திங்களெண்டால் பொம் பண்ணு வம். அந்தச் சேதம் எத்தனையோ நாள் உழைப்புப் போய்விடும் என்று. எனக்கு அவனில்தான் சந்தேகம்".

"இவன் என்னடா காரியத்தைக் கெடுத்திடுவான் போல இருக்கு" வரன் கவலைப்பட்டான்.

"வரன் நீ வீட்ட நில்லு காந்தனும் நானும் போய் துண்டுப் பிரசுரங் களைக் கொண்டு வருகிறோம்" மணி சொல்லி விட்டு காந்தனுடன் சைக்கிளில் கிளம்பினான்.

இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாகி விட்டது மணியையும் காந் தனையும் காணவில்லை. வரன் தன் வீட்டு வாசலில் உட்கார்ந்து பார்த் துக் கொண்டிருந்தான். அப்போது அங்கே ராஜு" வந்தான். "டேய் வரன் எங்கடா மணி ஆட்களைக் காண வில்லை என்று முடிப்பதற்குள்....

"ராஜு" என்னடா காலையில எங்கு குண்டு வெடித்தது; உனக்கு அதில் என்ன சம்மந்தம்"

"வரன் நான் ஒன்றும் செய்யவில் லையடா. நீ ஏன் என்னில கோவிக் கிறாய்.....; இவன் ரமேஷிட்ட சொன் னனான் கொன்மன்ட் பிள்ளைகள் சொல்லுக் கேட்கிறார்களில்லை கவ னித்து விடு என்று அவன் காலை யில் பாடசாலை முற்றத்தில் குண்டு எறிந்து விட்டான்டா"

"எனனடா...... சொல்லுகிறாய்...., அங்கிருந்தவர்களுக்கு ஒன்றும் ஆகவில்லையா"

"இல்லை வரன் அது சும்மா சத்தம் தான் வேறுஒன்றும் இல்லை. சும்மா பயம் காட்டுவதற்காகத்தான்..."

"சரி..., சரி ராஜு" வெள்ளிக்கிழமை கடையைத் திறந்தால் ஏதும் செய் வித்திடாதே. இது ஒரு சாத்வீகப் போராட்டம் என்பதை மறந்து விடாதே"

"காந்தன் அதற்குள் சொல்லிப் போட்டானா? சும்மா வெருட்டி னான்டா"

"ராஜு" ஜீப் எரித்ததால் உவர்மலை முழுக்கச் செக் பண்ணுறாங்கள், மணியும் காந்தனும் துண்டுப்பிர சுரங்களை எடுத்துவரப்போய் இரண்டு மணித்தியாலமாகுது இன் னும் காணவில்லை. வாறியா போய் பார்த்துவிட்டு வருவம்" இருவரும் சைக்கிளில் கிளம்பினர்.

பிரதான வீதியில் இராணுவ நடமாட் டம் கூட இருப்பதால் கடலருகே யுள்ள வீதியால் சென்றனர். சற்றுத் தூரத்தில் பொலிஸ் அதிகாரிகள் நிற்பதைக் கண்டு இடையிலேயே நிற்க அங்கிருந்த வீட்டிலிருந்து ஒரு பெரியவர் வந்து "தம்பிமாரே விஷயம் தெரிந்தும் ஏன் இதில நிற்கிறீங்கள்; இந்த லைபிறரிக்குள் போய் இருங்கள்" என்றார்.

"ராஜு" பெரியவர் சொல்லுறதும் சரி தான் வா போய் இருப்பம்"

வரனால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ராஜ" வா போய்ப் பார்ப்போம்; எனக்கு ஏதோ சந்தேகமாக இருக்குது" வரனும் ராஜ"வும் புறப்பட்டனர். அவர்கள் புறப் பட மணியும் காந்தனும் வந்துகொண்டி ருந்தனர்.

"மணி என்னடா இவ்வளவு நேரம்" வரன் பதட்டத்துடன் கேட்டான்.

"நாங்கள் போக வீட்ட ஆர்மி செக் பண்ண வந்துவிட்டாங்கள். இப்பதான்டா சந்தர்ப்பம் கிடைத்தது" என்றான் மணி.

"சரி எல்லாம் எடுத்து விட்டீங்களா? வாங்கடா எங்கட வீட்ட கொண்டு போய் வைப்போம்" என்றான் வரன்.

"இல்லை வரன் இன்றைக்கே இவை களைக் கொடுப்போம். நாளைக்கு நிலை எப்படியிருக்குதோ தெரியாது உன்னிடமிருப்பதை நாளைக்குக் கொடுக்கலாம்" என்றான் மணி.



துண்டுப்பிரசுரங்களைக் கொடுத்து முடிந்த பின்னர் எல்லோரும் வரன் வீட் டிற்குச் சென்று சுவரொட்டிகளை எழு திக் கொண்டிருந்தனர். வரனின் தாயார் எல்லோரும் கவனமாக இருக்க வேண் டுமென்று அறிவுரைகள் சொன்னார். எல்லோரும் நாளை 7 மணிக்கு சந்திப் பதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டனர். வரன் இரவு 12 மணியளவில் முன்வீட்டு வேலியில் சுவரொட்டியை ஒட்டி விட்டு வந்து விட்டான்.

அடுத்தநாள் வீட்டுக்காரர் "என்ட வீட்டு வேலியில் ஒட்டி என்னைப் பொலிஸில் மாட்டப் போறாங்கள் என்று" கிழித்து எறிவதை வரன் பார்த்துச் சிரித்தான்.

7 மணியளவில் எல்லோரும் ஒன்றா கவே எல்லா இடங்களுக்கும் சென்று நாளைய ஹர்த்தாலுக்கு முழு ஒத்து ழைப்புத் தருமாறு கேட்டுக்கொண்டனர்.

வெள்ளிக்கிழமை ஹர்த்தால் மாபெரும் வெற்றியளித்தது. தமிழ், முஸ்லிம் கடை கள் மூடப்பட்டு, வீதிகள் மக்கள் நட மாட்டம் இல்லாது காட்சியளித்தது. பத்திரிகை தணிக்கை அமுலில் இருந்ததனால் திருமலை தவிர்ந்த மற் றைய இடங்களுக்கு இந்நிலை தெரியா மலே போய் விட்டது.

ஆனால் பொலிஸாரின் வேட்டை ஆரம் பமானது. பொலிஸார் பாடசாலைகளுக் குச் சென்று சமூகம் தராதவர்களின் பெயர்களைச் சேகரித்துச் சென்றனர். சில மாணவர்கள் பொலிஸ் நிலையங் களுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப் பட்டனர். இதனால் பாடசாலை பகிஷ் கரிப்பு ஒழுங்கு செய்தவர்களே ஜீப் எரித்த சம்பவத்திற்கும், குண்டு வெடி த்த சம்பவத்திற்கும் பொறுப்பாளியா வார்கள் என்று அறிவித்தது பொலிஸ் விசாரணைக் குழு.

இதனால் அதிபரின் வேண்டுகோளுக் கிணங்க மணி, வரன், காந்தன், ராஜ", ரகு சிறிது காலம் பாடசாலைக் குச் செல்லாமலிருந்தனர். காலப் போக்கில் 'இளைஞர் அணி' என்று இவர்கள் வர்ணிக்கப்பட்டனர். வேறு வழியில்லாமல் மணி, ராஜ", ரகு ஆகிய மூவரும் தமிழீழப் போராட்ட குழுக்களில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

(இக்கதையின் சம்பவங்கள் யாவும் கற்பனையல்ல.) (இதன் 2ம் பகுதி விரைவில் 'ரோஜா'வில் பிரசுரிக்கப்படும்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசிறந்த உயர்ந்தரக பட்டுப் புடவைகளை
விற்பனை செய்து பல்லாயிரக்கணக்கான
வாடிக்கையாளர்களின் நெஞ்சங்களில்
நீங்காத இடத்தைப் பெற்ற ஒரே ஸ்தாபனம்

**Kumars**
**SILK HOUSE**

**1394 GERRARD ST. E., TORONTO, ON.**
**(416) 465-7131**

**1995ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட**
**கூறை சாறிகளின் வகைகள்**

*பனாரஸ் கூறை (உயர்ந்த ரகம் Rupa Gold Work)*
*பனாரஸ் கூறை (உயர்ந்த ரகம் Sorupa Silver Work)*
*பனாரஸ் கூறை (உயர்ந்த ரகம் Half & Half New Design)*
*பனாரஸ் கூறை (உயர்ந்த ரகம் Rupa Gold & Sorupa Silver Work)*
*பனாரஸ் கூறை (உயர்ந்த ரகம் Gold, Silver Work with Sequene & Pearls)*
*பனாரஸ் கூறை (உயர்ந்த ரகம் Gold & Silver Patli New Design)*

தூய பனாரஸ் சற்றின் சில்க் சாறிகள் (Very light-weight work)

1000க்கும் மேற்பட்ட 1995ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட Handloom சாறிகளின் உயர் ரகங்களான Rangoli Silk Sarees, Apoorva Silk Sarees

இவற்றுடன் காஞ்சிபுரம் தூய பட்டு சாறிகள் (Original Kanchipuram) மற்றும் கௌரி, காயத்திரி ஒரிஜினல் மைசூர் சில்க், காஷ்மீர் சில்க் சாறிகளின் (Satin Guard, Misty Silk) 100க்கும் மேற்பட்ட புதிய டிசைன்களில் 1000க்கும் மேற்பட்ட தெரிவுகளில் உங்கள் எண்ணம் போல் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஆண்கள் பெண்களுக்கான 1995 புத்தம் புதிய டிசைன் **சிற்றிசன், சீக்கோ** கைக்கடிகாரங்கள் 35% விசேட கழிவு விலையில் 5 வருட உத்தரவாதத்துடன் விற்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S.K. BALES
# INSTITUTES

**S.K. Bales Driving School ஸ்தாபனத்தாரின் மற்றொரு சேவை S.K. Bales Institutes**



பல்கலைக்கழகம் விரைவில் செல்ல வேண்டுமா?

கவலையை விடுங்கள்.

உங்களுக்குத் தேவையான சிறப்புப் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளச் செய்வதில்....

**95% எமது பாடசாலையின் பொறுப்பு!**
**5% மட்டுமே உங்களின் உழைப்பு!!**

6ம் வகுப்பு முதல் O.A.C. வகுப்புவரை சகல பாடங்களும் ஒன்ராறியோ பாடத்திற்கமைய இலங்கையிலும், கனடாவிலும் அனுபவமும், திறமையும் உள்ள தமிழ்ப் பட்டதாரி ஆசிரியர்களினால் போதிக்கப்படும். மிகவும் குறைந்த மாதக் கட்டணமே அறவிடப்படும்.

**S.K. பாலேஸ் (முன்னாள் ஸ்கந்தா ஆசிரியர்)**
**அலுவலகம்: (416) 265-1297, இல்லம்: (416) 265-3920**
**2627 Eglinton Av. E., Suite. 3 & 5 (at Brimley), Scarborough**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயணா........... நாராயணா!

யார் அங்கே! ஒ நாரதரா? ஓய் நாரதரே எத்தனை தடவை சொல்லி இருப்பேன் உமக்கு? எனது சூரசாம்ராஜ்யத்தில் நாராயண நாமம் சொல்லிக் கொண்டு வரவேண்டாம் என்று!

மன்னிக்க வேண்டும் சூரபத்மா! மன்னிக்க வேண்டும்! சூரபத்ம நமக! சூரபத்ம நமக!

சரி சரி வந்த விடயத்தை சொல்லும். பூலோகம் சென்றீரே என்ன நடக்கிறது அங்கு அதைச் சொல்லும்!

சூரபத்மா அதைச் சொல்லத்தானே இங்கு வந்தேன். அது சரி சூரபத்மா என்ன உணவு அருந்திக் கொண்டிருக்கிறாய்?

ஆ...... ஆ......... ஹா....ஹ எருமைத் தயிரில் மாட்டை வதக்கி சாப்பிடுகிறேன். ஏன் நீரும் ஒரு பிடி பிடிப்பதுதானே. ஆ ஹா..... ஹா.....

அபசாரம்........ அபசாரம்.... சூரபத்மா உன் சூர கோட்டையில் கிடைக்காத அளவு இறால், மீன், நண்டு, கணவாய், போன்றவை உடனுக்குடன் அதுவும் உன் ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி எல்லாம் பூலோகத்தில் மிக மிக மலிவாக கிடைக்கின்றன.

என்ன நாரதரே உளறுகிறீர் இங்கு கிடைக்காதவை அதுவும் உடன் இறைச்சி பூலோகத்திலா? வேடிக்கையாக இருக்கிறது!

உண்மை சூரபத்மா உண்மை

முன்பு ஒரு காலத்தில் அவை தமிழ் ஈழத்தில் கிடைப்பதை அறிந்து பொறுக்க முடியாத என் தம்பி சிங்கமா சூரன் தன் வம்சா வழியான சிங்கள வனை இராணுவ வீரராக மாற்றி அங்கு அனுப்பி அவற்றையும் அவைகளை விற்பனை செய்பவர்களையும் துவம்சம் செய்து விட்டானே. மீண்டும் எங்கே ஆரம்பமாகி விட்டது விற்பனை, ஆச்சரியமாக இருக்கிறதே.

ஆமாம் சூரபத்மா ஆமாம் சிங்கமா சூரன் அவசரம் பிடித்தவன் துவம்சம் செய்தானே அன்றி முற்றாக அழித்தானா? இல்லையே? அவனால் சங்காரம் செய்யப்பட்டு தப்பியவர்கள் இப்போ வட அமெரிக்காவில் குடியேறி அங்கு விற்பனை ஆரம்பித்து விட்டார்கள்.

அவமானம்! அவமானம் நாரதரே! தம்பி சிங்கமாசூரன் அவசரம் பிடித்தவன்

டொன்மில்ஸ் சிவப்பிரகாசத்தின்...

## ராசுக்குட்டி அப்பா

## சூரன் கோட்டையில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுதான் தாடகையை அனுப்பினேன்.
அவளுமா அப்படி?
தாடகையின் ஆட்சிதானே தற்பொழுது நடைபெற்று கொண்டிருக்கிறது சூரபத்மா! ஆனால்....

என்ன ஆனால் சொல்லும் நாரதரே! முன்புபோல் உன் வம்சமோ அல்லது எவருமோ நினைத்தவுடன் உலகத்தை எளிதாக அழிக்க முடியாது. தமது வரம்பு எல்லை இவைகளுக்குள்தான் செய்ய முடியும்.

இஞ்சேருங்கொ......... இஞ்சேருங்கோ.... உங்களைத்தான் கோப்பி போட்டுக் கொண்டு வரச் சொல்லிப் போட்டு அதுக்குள்ளை நித்திரைகொள்ளுறியளே வள்ளி அம்மையின் குரல் கேட்டுத் திடுக்கிட்டு எழும்பிய ராசுக்குட்டியர் எட வள்ளிஅம்மை கனடா தமிழ் ஒலிபரப்புக் கேட்டு கொண்டு படுத்திருந்தன் அதுக்குள்ளை சூரன் கோட்டை வரைக்கும் போட்டு வந்திட்டன் கண்டியே என்றபடி வள்ளி ஆச்சியிடம் இருந்து கோப்பி டம்ளரை வாங்கினார் ராசுக்குட்டியர்.

இஞ்சையப்பா கோப்பியைக் குடிச்சு போட்டு நேற்றைக்கு அவிச்ச குழல் புட்டு கிடக்கு நேற்றையான் நண்டுக்கறி ஐஸ் பெட்டிக்கை கிடக்கு சுடவைச்சுச் சாப்பிடுங்கோ நான் ஒருக்கா உங்கடை நடராசா அண்ணன்ரை கடைசி மருமகள் பெட்டை பெத்திருக்கிறாளாம். உந்த மணல் மேடுவரைக்கும் போட்டு வாறன் என்ற வள்ளி ஆச்சியை இடைமறித்த ராசுக்குட்டியர் எணை...... எணை.... மணல்மேடு இல்லை மோணல் கோட் எண்ட இடம் எணை என திருத்தவும், என்ன இழவோ என்றபடி ராசுக்குட்டியரின் பதிலையும் எதிர்பாராமல் எலிவேற்றரை நோக்கி ஓடினா வள்ளி ஆச்சி.

எட நடராசா அண்ணையின்ரை மகனுக்கும் இரண்டாவது பிள்ளை எட இப்பதான் அம்மன் கோவில் தேரிலை இருந்தவன் போல கண்ணுக்கை கிடக்கு. ம்........ ம்...... காலம் தான் எவ்வளவு வேகமாக ஓடிக் கொண்டிருக்கு என்றபடி எழும்பிய ராசுக்குட்டியரை கதவு நீக்கலால் விழுந்த இலங்கைத் தபால் ஒரு கணம் இலங்கையை நோக்கிப் பாய வைத்தது. கடிதத்தை எடுத்தவர் முதலில் பிரிக்காது சுத்திச் சுத்தி பார்த்தவர் எப்ப போட்டிருக்கு என்று சுற்றிச் சுற்றி பார்த்து விட்டு மெல்லக் கடிதத்தை உடைத்தவர் படிக்கத் தொடங்கினார்.

கந்தரோடை
யாழ்ப்பாணம்
1/5/95
அன்புள்ள அண்ணன் ராசுக்குட்டிய ருக்கு சகோதரி நாகம்மா எழுதிக் கொள்வது, இங்கு நாங்கள் யாவரும் சுகமாக இருக்கிறம். அவ்விடம் எப்படி என்பதை எழுதவும். நீங்கள் அனுப்பிய சின்னராசுவின் குறிப்புக் கிடைத்தது. பெடியனுக்கு 4ம் இடத்திலை சனி இருக்கு நான் கனடாவில் இருக்கும் போதே உங்களுக்கு சொன்னனான் சாத்திரி சரவணையும் அதைத்தான் இஞ்சை சொல்லுறார். செல்லம்மா அக்காவிட்டை கொண்டு போய் குடுத்தன் மனிசி, சின்னராசு இப்பவும் டபிள் அடிக்கிறாரோ அல்லது வெல்லிலை தான் இருக்கிறாரோ எண்டு கேட்டா. சரி விடு எண்டு போட்டு கனகக்காவிட்டை குடுத்தன் அவ பெடியன் சீட்டுப் பிடிச்சு வன்கூவர் போனவன் இப்ப எட்படி எண்டு கேட்டா?

நல்லம்மா அக்காவின்ரை கடைசிப் பெட்டை இப்ப 22 வயசு அவளுக்கும் சனிக்குற்றம் இருக்கு எண்டு கைலாசபதி அண்ணையிட்டைச் சாதகத்தைக் குடுத்தன் அவர் சொல்லுறார் தான் கனடாவிலை இருக்கேக்கை சின்னராசுவை தனக்குத் தெரியுமாம் ஒருநாள் தான் முருகேசரோடை பார்க்கிலை கடதாசி விளையாடேக்கை உவன் சின்னராசு தண்ணி அடிச்சுப் போட்டுத் தன்னையும் அடியுங்கோ எண்டு கேட்க தான் வேண்டாம் எண்ட, ஆறு கடந்த பின் அண்ணை என்ன தம்பி என்னடா எண்டு பாட்டு வேறை படிச்சவனாம். உவனுக்கு என்ரை பெட்டையைக் கொடுப்பனோ ராசுக்குட்டியரை வேறை வேலை கனடாவிலை பார்க்கச் சொல்லு எண்டு லொள்ளு அடிக்கிறார்.

நான் சாதகத்தைக் கொண்டு திரிஞ்சதுதான் மிச்சம். கனடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளை எண்டவுடன் சனம் அங்காலை பார்க்குது. பத்தாதுக்கு நாங்கள் காணாத கனடாவோ எண்டு கேக்கினை ஒரு வீரனுக்கு ஊரிலை கட்டிக் கொடுப்பனே தவிர கனடாக்காரனுக்கு இல்லை எண்டு நிக்கினம். இத்தோடை சாதகத்தையும் திருப்பி அனுப்பிறன் நீங்கள் சினன்னராசுவுக்கு உங்கை நல்ல இடமா பார்த்துச் செய்து வையுங்கோ. அதுசரி றிச்மனட் பிள்ளையார் எப்ப தேர் எண்டதை விசாரிச்சு எழுதுங்கோ நான் விரதம். தமிழ்க் கடையிலை கொஞ்சம் வடகமும், மோர் மிளகாயும் வாங்கி ஆரும் ஊருக்கு வாறவியளிட்டை குடுத்து அனுப்புங்கோ. இஞ்சை அதுகளை கண்ணாலேயும் காணேல்லை.

இப்படிக்கு
உங்கள் சகோதரி
நாகம்மா

ஊரில் இருந்து வந்த தன் சகோதரி நாகம்மாவின் கடிதத்தை படித்து முடித்த ராசுக்குட்டியர் பெருமூச்சு விடவும் திறந்த கதவு மூலம் உள்ளே வந்தார் முருகேசர்.

எட முருகேசு நல்ல நேரம் வந்தாய் இஞ்சைபார் ஊரிலை இருந்து தங்கச்சி கடிதம் போட்டிருக்கு சின்னராசுவுக்கு ஏதாவது பெட்டையை ஒழுங்கு பண்ணுவம் எண்டா ஊரிலை வீட்டுக்கு வீடு எங்கடை ஆட்கள் கனடாவுக்கு வந்துபோன சனம் கனடாவைப் பற்றி விசாரிச்சு எழுதி இருக்கு.
கடிதத்தை வாங்கிய முருகேசர் ஒரே வீச்சில் படித்து முடித்து தன்னையும் மறந்து சிரித்தார்.
அதுசரி ஒருகாலத்திலை கனடா.... கனடா........ எண்டு வந்தவை இஞ்சை வந்து வாழ்ந்து பார்த்து தப்பினோம் பிழைத்தோம் எண்டு அங்கை போனவைக்கு இஞ்சை சனம் படுகிற பாடு தெரிஞ்சும் பெண்ணைக் குடுப்பினமோ?
ம்......... பெருமூச்சு விட்டார் ராசுக்குட்டியர்.

கனடா அரசாங்கமும் விட்ட பாடில்லை. இறுக்கி, இறுக்கிப் பிடிச்சுச் சனங்களை வராமல் ஒரு பக்கம் செய்யிறாங்கள். அதைவிட எங்கடை பெடியளும் இஞ்சை சதந்திரத்தைத் தாறுமாறாகப் பாவிக்கிறாங்கள் என்ற ராசுக்குட்டியரை தொடர்ந்த முருகேசர்.

"ஊரிலை இருக்கிற சனம் இப்ப இஞ்சை வாறதைப் பற்றின யோசனையை விட்டு போட்டுது என்றபடி எழுந்தார். சரி ராசுக்குட்டியர் பேரனை டேக்கெயரிலை விட்டுப் போட்டு வந்தனான் நான் வாறன் என.படி எழுந்தவர் வள்ளி அம்மை ஆச்சி வரவும் "என்ன வள்ளி அம்மை எங்கை போட்டு வாறா
"அண்ணை எங்கடை ரஞ்சன்ரை பெண்சாதி பிள்ளை பெத்தவளல்லே இண்டைக்குப் பிள்ளைக்குப் பெயர் வைக்க கூப்பிட்டவள்அதுதான் போட்டு வாறன்.
"எட அதுக்கும் பாட்டி வைக்கத் தொடங்கி விட்டினமே கனடாவிலை என்ற முருகேசரை தொடர்ந்த வள்ளி ஆச்சி பாட்டி இல்லை பாட்டியை அதுதான் என்னை வந்து பிள்ளையின்ரை காதிலை பிள்ளையின்ரை பெயரை சொல்லச் சொல்லிச்சினம் அதுதான் சொல்லிப் போட்டு வாறன். எட அதுக்கு ரெலிபோனிலை இஞ்சை இருந்து பிள்ளையின்ரை காதிலை சொல்லி இருக்கலாமே. ஏன் நீ போனாப் போலத்தான் பிள்ளைக்கு கேக்குமாமே.

ஓம் அண்ணை
எட அது இப்ப கனடாவிலை ஒரு வழக்கமாம்.
சரி சரி பிள்ளைக்கு என்ன பெயர் வைச்சவை அவசரமாக கேட்டார் முருகேசர்.
"கயனா!" என்ற வள்ளி ஆச்சி எட விசர் மனிசி கயானா இல்லை.... "கஜானா" தகப்பன்காரன் இப்ப கொஞ்சத்துக்கு முன்னம் என்ரை காதிலை ரெலிபோனிலை சொன்னவன் நான் குழந்தைக்கு கயானா எண்டி இப்பவே அந்த நாட்டுப் பெயரை சொல்லிப் போட்டன் எக்கணம் பெட்டை பெரிசா வந்தா நினைச்சு நினைச்சுச் சிரிக்கப் போறாள்.

முருகேசர் தலை தெறிக்க ஓடினார்!

★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ரோஜா' மலரே நீயா?

~ குறமகள்

ரோஜா மலரே நீயும்
கோஷா அல்ல அறிவேன்
மென்மை உனக்கா? மேலாம்
வண்ணம் உனதா? வாசம்
நறியது தானா?
அழகு மலரும் நீதானா?

கண்ணே
காலப் போக்கில் நீயும்
காலன் போலச் சிலிர்ப்பாய்
கண்கள் நெருப்பைக் கக்கும்
காதல் போகும் வீரம் பிறக்கும்
முள்ளு உனது கவசம்
முரண்டு நிமிர்வாய் தானோ?

நரம்பு தடவிய கரங்கள்
இரும்புக் குழாயைத் திருகும்
பிடித்த முத்திரை அடவுகள்
அணிநடை லயத்துள் அடங்கும்
தொடுவான் சூரியன் நோக்கி
கடுகதிக் கால்கள் பாயும்

கற்பனையா இது
இல்லை இல்லை! அன்றொருநாள்
அப்படித்தான் ஒரு றோசாவும்....
தென்றல்
புயலாய் மாறிய போதும்
நன்றே விழைந்தோம்
தேற்றங் கண்டோம் தெளிந்தோம்
துடிப்பு மேவ வாழ்த்துதும்!

# அசைகள்

~ கவிஞர் இன்குலாப்

வலைப்பட்ட மீனைப்போல்
சிந்தனைகள்.........
வற்றாத கடலைப்போல்
அறியாமை

க்ரீச்........ அணில்........ முதுகில்
ஹைக்கூ.......

சிறகு விரித்த விதை
முளைக்கஒரு பிடி மண் தேடும்

மூடிய சன்னலுக்கு வெளியே
விடியல்

சன்னலைக் கொத்துகிறது
மரங்கொத்தி

இலைச் சொற்கள்
மலர் வண்ணம்
பச்சைக் கவிதைகள்
கோடாரி முனையில்

தேர்ந்த தூரிகை
ஆனால்
கட்டளை இட முடியாது
எந்த ஒரு செடிக்கும்
எப்படி பூப்பது என்று

கல் எறியாதே
"கடல்"

*****


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடியோ மாருதி
# VIDEO MARUTY INC

* Professional Video Productions
* International Video Transfer

சகலவித மங்களகரமான
வைபவங்களையும் நவீன முறையில்
3 CCD மூலம் வீடியோவில்
பதிவு செய்து தரப்படும்.

ரொறன்ரோ
கிருபா (416) 751-8143

மொன்றியல்
(514) 989-5021 இன்பன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GASA Restaurant



இலங்கை, இந்திய, கனேடிய உணவகம்

## Take Out & Catering

உங்கள் அனைத்து வைபவங்களிற்கும் நீங்கள்
விரும்பிய உணவுகளையும் சிற்றுண்டி
வகைகளையும் சுவையுடன் செய்து தருகிறோம்.

## சுவை, அது *GASA!!!*

மலிவு விலையில்....

| | |
|---|---|
| * Rice with 4 Veg. + 1 Meat Curry | $4.75 |
| * 10 Chicken Wings with Fries | $3.99 |
| * 5 Chicken Wings with Fries | $1.99 |
| * கொத்துரொட்டி (ஆடு, மாடு, கோழி) | $3.99 |
| * 2 ரொட்டி + கறி | $2.99 |

**Tel: (416) 321-1219**

2950 Kennedy Road, Unit. 3
(Kennedy & North of Finch)
Scarborough, ON




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகுந்த நாட்டில் எம்மைச் சுற்றி.....

உலகப் படத்தில் ஒரு மையக் கோடாக கனடா தேசம் இன்று மாற்றம் பெற்றுள்ளது. வெப்ப, தட்ப நிலைமை காரணமாக மனிதர்கள் வாழமுடியாத ஒரு நாடாக முன்னொரு காலத்தில் கனடா விளங்கியது. நிலப் பரப்பினைப் பொறுத்தளவில் (முன்னைய) சோவியத் குடியரசுக்கு அடுத்ததாக - உலகின் இரண்டாவது பெரிய நாடாக விளங்கிய கனடா, அந்தக் காலத்தில் தனக்குத் தேவையான சனத்தொகையை இங்கு உற்பத்தி செய்ய முடியாமலும், இங்கு வசித்தவர்களை நிரந்தரமாகத் தங்க வைக்க முடியாமலும் தவித்ததால், உலக மகாஜனங்களுக்காகத் தனது கதவுகளை அகலத் திறக்க நேர்ந்தது.

## மொழியால் தமிழரா? பெயரால் தமிழரா?

இதனால், சர்வதேசத்திலும் ஆகக் கூடிய அகதிகளை ஏற்றுக் கொள்ளும் முதல் நாடாகவும், அகதிகளை உற்பத்தி செய்யும் நாடுகளின் ஏற்றுமதிச் சந்தையில் பிரதான இறக்குமதித் தளமாகவும் கனடா கடந்த இருபதாண்டுகளில் மாற்றம் பெற்றுள்ளது. இதனால் ஐக்கிய நாடுகள் சபையின் தங்கப் பதக்கமும் கனடாவுக்கு வழங்கப்பட்டது. கனடா தேசத்தை பல்கலாசார, பலவின மக்கள் வாழும் நாடு என்றும், உலக சமுதாயத்தின் கூட்டுக் கதம்ப வாழ்வுக்கு உதாரண-மான நாடு என்றும் கூறுகின்றனர்.

வெளியுலகுக்கு இவ்வாறாகக் கனடா தெரிகின்ற போதிலும், உண்மையாக ஒன்ராறியோ மாகாணமே பல்கலாசார சூழலை உருவாக்கி வைத்திருக்கின்றது. இந்த மாகாணத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றான ஒட்டாவா கனடாவின் தலைநகராக விளங்குகின்றது. ஒன்ராறியோ மாகாணத்தின் தலைநகரான ரொறன்ரோ பட்டணம் உலகின் வாழ்க்கைத் தர முயர்ந்த முதல் பத்துப் பட்டணங்களில் ஒன்றாகத் திகழுகின்றது. ரொறன்ரோ, ஸ்காபரோ, எற்றோபிக்கோ, நோர்த் யோர்க், ஈஸ்ற் யோர்க், யோர்க் நகரம் ஆகிய ஆறு நகர சபைகளை உள்ளடக்கிய ரொறன்ரோ மாநகர-சபையானது கனடாவின் மிகப்பெரிய வர்த்தக, நிர்வாக, உல்லாசப் பயணப் பிரதேசமாக விளங்குகின்றது.

உள்நாட்டு அரசியல் ரீதியாகப் பார்க்கையில், 295 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 99 (ஏறத்தாழ 33 வீதம்) உறுப்பினர்கள் ஒன்ராறியோ மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்படுகின்றனர். பல்வேறு இன, மதங்களையும் பிரதிபலிப்பவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். மத்திய அரசின் அமைச்சர்களுள் பெரும்பான்மையானவர்கள் இந்த மாகாணத்தின் பிரதிநிதிகள். குயின்ஸ் பார்க்கிலுள்ள ஒன்ராறியோ மாகாண மன்றத்தின் உறுப்பினர்கள் தொகை 131. பல்லினக் கலாசாரத்தின் பிரதிபிம்பமாக இந்த மாகாண சபை அமைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் 160க்கும் மேற்பட்ட இன மக்கள் இங்கு வசிப்பதாகும்.

இலங்கையின் இனப்பிரச்சனை காரணமாகப் புலம்பெயர்ந்த சுமார் ஒரு லட்சம் தமிழர்கள் ஒன்ராறியோவில் வசிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஈழத் தமிழர்களின் இரண்டாவது தாயகமாக இது கருதப்படுகின்றது. உலகின் வேறெந்த நாட்டிலும் இவ்

உதாசனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவு தொகையான ஈழத்தமிழர்கள் ஒரு தசாப்தத்துக்குள் குடியேறவில்லை என்பதை நாம் அவதானிக்க வேண்டும். கனடிய அரசாங்கத்தின் தாராள மனப்பான்மையும், கனடிய மக்களின் பாரபட்சமற்ற வரவேற்பும் எம்மவர்களை இங்கு குடிபுகச் செய்த காரணிகள்.

கனடா வரும் அகதிகள், புதிய குடிவரவாளர்கள் ஆகியோரில் சுமார் அறுபது வீதத்துக்கும் அதிகமானவர்கள் ரொறன்ரோவையே தங்கள் குடியமர்வுக்கான பிரதேசமாகத் தெரிகின்றனர். இதனால் ரொறன்ரோவின் சனத்தொகை அதிகரிப்பு அரசுக்கு ஒரு சவாலாகவே அமைந்து வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்தவும், பரவலாக்கவும் அவ்வப்போது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற போதிலும் அது நடைமுறைச் சாத்தியமற்றதாகவுள்ளது.

ரொறன்ரோவின் தனிச்சிறப்புகளில் ஒன்று வெளிநாடுகளின் பெயரில், அல்லது வெளிநாட்டு இனங்களின் பெயர்களில் இங்கு குறிச்சிகள் அமைந்திருப்பது. சைனா ரவுண் (ஸ்படைனா வீதி), இந்தியன் பஸார் (ஜெரார்ட் வீதி - இங்கு இடம்பெற்று வரும் வர்த்தகக் கைமாற்றம் காலக்கிரமத்தில் தமிழர் பஜாராக இதனை மாற்றலாம் போலத் தெரிகின்றது), இத்தாலிய நகர் (டபரின் பகுதி), போர்த்துக்கீஸ நகர் (கொலிஜ் வீதி), கிறீக் கிராமம் (டன்போர்த் வீதி) என்றவாறு பல்வேறு குறிச்சிகள் அமைந்துள்ளன.

பார்லிமென்ட்-வெலஸ்லி பகுதியானது 'குட்டி யாழ்ப்பாணம்' என்று செல்லமாக அழைக்கப்படுகின்றது. இப்பிரதேசம் அமைந்துள்ள சென் ஜேம்ஸ் பகுதியில் சுமார் நாற்பதாயிரம் மக்கள் வசிக்கிறார்கள். இவர்களுள் தமிழர்கள் ஏழாயிரம் பேர் வரை வசிப்பதாக நகரப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சந்திப்பில் இருபதுக்கும் அதிகமான வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ளன. பலசரக்கு வியாபாரம், உணவகங்கள், புடவை வர்த்தகம், புத்தக நிலையம், வீடியோ-ஓடியோ கஸட் நிலையங்கள், வெளிநாடுகளுக்குப் பணம் அனுப்புதல், சிகை அலங்காரம் என்ற பல்வேறு வகையான வர்த்தகமும் இங்கு நடைபெறுகின்றது. தமிழ் நூலகம் ஒன்றும் இங்கு இயங்குகின்றது.

றோஸ் அவினியு பாடசாலை இப்பகுதி மக்களுக்கான பிரதான பாட-சாலை. இப்பாடசாலையின் தமிழ் மாணவர் தொகை இவ்வருடம் 33 வீதமாகும். கடந்த வருடம் 22 வீதமாகவிருந்த தமிழ் மாணவர் தொகை இவ்வருடம் 11 வீதத்தினால் அதிகரித்துள்ளமையானது, இப்பகுதியிலிருக்கும் தமிழ் மக்களது தொகையினை எடுத்துக்காட்டுகின்றது. ரொறன்ரோ பிரதேசத்தில் ஆகக்கூடிய தமிழ் மாணவர்களைக் கொண்ட பாடசாலையாக இது விளங்குகின்றது. இப்பாடசாலையில் கடந்த வருட விஜயதசமியின்போது வித்தியாரம்பம் நடத்தப்பட்டு, கனடாவில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ரொறன்ரோ பெரும்பாகத்தின் சகல பாடசாலைகளிலும் தற்போது நிரம்பிய தமிழ் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். அநேகமாக இங்குள்ள சகல பாடசாலைகளிலும் தற்போது தமிழ் மாணவர் மன்றங்கள் அமைந்து சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன. முக்கியமாகத் தாயக உணர்வு நிரம்பப் பெற்றவர்களாக, எமது போராட்டத்தை மையமாகக் கொண்ட பல கலை நிகழ்ச்சகளை இவர்கள் நடத்தி வருவது பாராட்டப்பட வேண்டியதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும், எமது மாணவர்கள் தமிழைக் கற்பதில் அதிக அக்கறை காட்டாதிருப்பது பல சந்தர்ப்பங்களிலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. தமிழ் மாணவர்கள் கல்வி கற்கின்ற பாடசாலைகளில் தமிழைக் கற்பதற்கு பாடசாலைச் சபைகள் ஒழுங்குகள் செய்து கொடுத்துள்ளன. ஆனால் இருபது வீதம் வரையான தமிழ் மாணவர்களே தமிழைக் கற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக் கழகக் கல்விக்குத் தேவையான 'கிறடிற்' வழங்கும் ஒரு பாடமாக தமிழ் போதிக்கப்படுகின்றது. போதிய மாணவர்கள் தமிழைக் கற்க முன்வந்தால் மட்டுமே அந்தப் பாடசாலையில் தமிழைக் கற்பிக்க முடியும். மாணவர்கள் ஏனோ அவ்வளவு அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. இவ்வருடம் ஸ்காபரோ பிரதேசத்தில் இரண்டு பாடசாலைகளில் தமிழ் 'கிறெடிற்' வகுப்புகள் ஆரம்பிக்க அனுமதி கிடைத்த போதிலும், போதிய விண்ணப்பங்கள் கிடைக்காததால் ஒரு பாடசாலையில் மட்டுமே ஆரம்பிக்க முடிந்தது வேதனைக்குரியது.

அரசாங்கம் பாடசாலைகளில் தமிழைக் கற்பிப்பதற்கு இடமளிக்கின்றது. ஆசிரியர்களை நியமிப்பதற்குச் சம்மதமளிக்கின்றது. தமிழில் புலமை பெற்றவர்களை ஆசிரியர்களாக நியமித்துச் சம்பளமும் வழங்கத் தயாராகவுள்ளது. ஆனால் படிப்பதற்கு மாணவர்கள் தயாராகவில்லை. இதற்குக் காரணமென்ன?

பல இடங்களில் தங்கள் பிள்ளைகள் தமிழ் கற்பதைப் பெற்றோரே விரும்பவில்லை என்று கூறப்படுகின்றது. 'எங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ் படிப்பிப்பதற்காகவா நாம் கனடா வந்தோம்?" என்று சில பெற்றோர்கள் மிகச் சூடாகக் கேட்கின்றனராம். மாணவர்கள் கேட்கும் கேள்வி வேறு: 'தமிழைப் படிப்பதனால் என்ன பயன்?" என்பதே இவர்கள் கேள்வி. நியாயமான கேள்வி இது. ஒரு தமிழன், தனது தாய்மொழியைக் கற்பதனால் தனக்கு என்ன லாபம் கிடைக்கும் என்று கேட்கின்றான் என்றால், இதனைப் போய் யாரிடம் சொல்லி முறையிடுவது? கவிஞர் கந்தவனம் அவர்கள் தமது மணிவிழாப் பதிலுரையில் இதற்களித்த பதில் ஞாபகம் வருகின்றது:

**"தாய்மொழியைக் கற்றல்**
**தலையாய பிறப்புரிமை**
**தாய்மொழியோர் வணிகச்**
**சரக்கல்லத் தம்பி!**
**இலாபநட்டம் பார்த்திங்கு**
**கேடு திறப்பதற்குச்**
**சிலாபம் புத்தளத்தில்**
**நயம்பார்த்த செந்தமிழர்**
**படிப்படியாய்ப் பரிசற்றுச்**
**சிங்களவர் ஆனகதை**
**படிப்பினையாய் இருக்கையிலே**
**தமிழ்படிக்க மறுப்பதுமேன்**
**அங்கவர்கள் ஆட்சிச்**
**சூழ்ச்சியினால் அறிவிழந்தார்**
**இங்குன்னைத் தடுப்பவர்கள் யார்?**

**இணையற்ற கனடியர்கள்**
**பல்கலாசாரப் பண்பாட்டுப்**
**பின்னணியில்**
**கல்விதனில் தாய்மொழியைக்**
**கற்கும் உரிமையினைத்**
**தந்தாலும் வேண்டாம்**
**எனத் தள்ளும் தமிழ் மகனே**
**பெற்றதாய் மொழியைப்**
**பேசல் கற்றல் எலாம்**
**உற்ற பிறப்புரிமை**
**உணர்வாய் உருப்படுவாய்!"**

ஒருவன் தனது தாய் மொழியைக் கற்பதற்கு லாப நட்டம் பார்க்க இது என்ன விற்பனைச் சரக்கா என்று சற்றே சூடாகக் கேட்கிறார் கவிஞர் அவர்கள். சில தமிழர்கள் தமிழைப் படிக்கவும், தமிழில் பேசவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்கப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. வேறு சிலர் தமிழில் பேசும் சக மாணவர்களுடன் சேருவதற்கு விரும்புகின்றார்கள் இல்லை என்றும், அவர்களை விரோதிகள் போலப் பார்க்கின்றார்கள் என்றும் கேள்விப்படும்போது, அவர்களை நினைக்க வேதனையாகவிருக்கின்றது.

இங்கு வந்துள்ள ஒவ்வொருவரும் சில மாதங்களில் அல்லது ஓரிரு வருடங்களில் நிச்சயமாக ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும், எழுதவும் பழகிக் கொள்வார்கள். அதற்காக, தமிழில் பேசக்கூடாது எனறோ அல்லது தமிழை ஒரு பாடமாகக் கற்கக் கூடாது என்றோ நினைப்பது தவறாகும். தனது தாய் மொழியாம் தமிழைத் தெரியாத ஒருவர் தம்மைத் தமிழன் என்று அழைப்பதில் என்ன பிரயோசனம்? தென்னாபிரிக்க நாடுளிலும், பர்மாவிலும், சிங்கப்பூரிலும் வாழ்ந்த தமிழர்களுக்கு நேர்ந்த கதியை நாம் மறந்துவிட முடியாது.

தென்னாபிரிக்காவிலிருந்து ரினிடாட்டுக்கு வந்து, அங்கிருந்து கனடா வந்திருக்கும் இந்தியர்கள், தங்கள் தாய்மொழி என்னவென்று தெரியாதவர்களாக, வெறுமனே பெயரை மட்டும் ராம்கிசூன் (இராமகிருஷ்ணன்), ப்ரசாட் (பிரசாத்) என்றவாறு வெட்டி

---

**அடுத்த இதழில்...**

**பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் அவர்களுடன் ஓர் சந்திப்பு**

"இந்தியாவின் துணையில்லாமலே தமிழீழத்தை அடையும் வீரமும் தீரமும் கொண்டவர்கள் விடுதலைப் புலிகள்......"

---

## கார் டயர்களை சாப்பிடும் அதிசய மனிதர்!



புதிய கார் டயர்களை வாங்கி அவற்றைப் பல துண்டுகளாக்கி அல்வா போன்று சுவைத்துச் சாப்பிடுகிறார், ஒருவர்!

ஜிம்மி கில்லிஸ்பீ என்பவருக்கு டயர்களைச் சாப்பிடுவதென்றால் உயிர். அதிலும் பயன் படுத்தாத புதிய டயர்கள் என்றால் அல்வா தான்! டயர்களில் பட்டர், ஜாம் இவற்றைத் தடவியும் சாப்பிடுவதுண்டு. டயர் சாப்பிடுவதால் இவர் உடல் நலம் சிறிதும் பாதிக்கப்படவில்லை. நன்கு ஜீரணமாகி விடுகின்றது. ஒருமுறை இவர் வீதியில் சென்று கொண்டிருந்தபோது புதிய கார் ஒன்றைப் பார்த்தார் அந்தக் காரின் புத்தம் புதிய டயரிலிருந்து மெல்லியதான ஒரு சிறு பகுதியை பிய்த்து எடுத்து ருசித்துப் பார்த்தார். அவருக்குப் பிடித்துப் போய்விட்டது. அடுத்து, புதிய டயர்களை வாங்கி அவற்றைச் சிறிய துண்டுகளாக வெட்டி, சாப்பிடத் துவங்கினார். அப்பொழுது ஆரம்பித்த இந்த பழக்கம் இன்றுவரை தொடர்கிறது. போதைப் பித்தர்களைப் போன்று "டயரை" சாப்பிடும் இவரை, இவர் மனைவி ஒரு மந்திரவாதியிடம் அழைத்துச் சென்று காண்பித்து வருகிறார்.

37 வயதான ஜிம்மி மின்சாரம் பழுது பாப்பவர். கடந்த ஐந்து ஆண்டுகளாக இப்படி டயர் சாப்பிடும் பழக்கத்திற்கு அடிமையாகியிருக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் கொத்தியும் சிதைத்தும் தங்கள் அடிமுடி தெரியாது எம்மத்தியில் வாழ்ந்து வருவதை நாம் கவனிப்போமானால், தாய்மொழி கற்காது விடுவதால் அடுத்த கால் நூற்றாண்டில் எமக்கு நடக்கப் போவதை உணர முடியும்.

எங்கள் பிறந்தகத்தில் தாய்மொழியை அரியாசனம் ஏற்ற, எங்கள் தாய்மொழியின் உரிமைக்காகப் போராடுகின்றோம். எங்கள் பிறப்புரிமை மறுக்கப்பட்டதாகக் குரல் கொடுத்து அதற்காக வாதாடுகின்றோம். புலம்பெயர்ந்த கனடாவில், நாங்கள் கேட்காமலே எங்கள் தாய்மொழியைக் கற்க அரசு சகல உதவிகளையும் செய்து தந்துள்ளது. ஆனால் நாமோ இதனைப் படிப்பதனால் என்ன லாபம் என்று 'வியாபாரக் கேள்வி' கேட்கின்றோம். எதனையுமே போராடிப் பெற்றால்தான் அதற்குப் பெறுமதி போலும்!

அப்படியானால், அதற்கும் காலம் நெருங்கி வருகின்றது. ஒன்ராறியோவில் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள மைக் ஹறிசின் கன்சர்வேட்டிவ் அரசாங்கம் அதற்கான சூழ்நிலையை உருவாக்கும் போலத் தெரிகின்றது. ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்துக்குள்ளேயே பல 'புரட்சி'கரமான மாற்றங்களைச் செய்து வருகின்றது. எல்லாமே 'வெட்டு'த் தான். 20,000 அரச ஊழியர்களைப் படிப்படியாக வீட்டுக்கு அனுப்ப முடிவு செய்துள்ளது. பொதுநலப் படியில் வெட்டு. முதியோர் பராமரிப்பு சேவைகளில் மாற்றம். இப்படிப் பலப்பல.

எல்லாவற்றுக்கும் மேலாக, சிறுபான்மை இன மக்களுக்காகவும், பெண்கள், வலது குறைந்தோருக்காகவும் முன்னைய அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட 'சம வேலை வாய்ப்புச் சட்டத்தினை' (*Empolyment Equity Act*) ரத்துச் செய்யப் போவதாக புதிய அரசு அறிவித்துள்ளது. இது நடைமுறைக்கு வரும்போது, தற்போதுள்ள தமிழ் வகுப்புகளும் நிச்சயமாகப் பாதிக்கப்படும். மாணவர்கள் குறைவாகவுள்ள வகுப்புகள் முதலில் நிறுத்தப்படலாம். படிப்படியாக வகுப்புகள் முற்றாக ஒழிக்கப்படலாம். இதற்குப் பற்பல காரணங்களை அவ்வப்போது கூறமுடியும். அவ்வேளையில். "எங்களுக்குத் தமிழ் வேண்டும்; தமிழ் ஆசிரியரை நியமிக்க வேண்டும்" கோஷம் போடப் போகின்றோமா?

தாமாகவே கிடைக்கும்போது வேண்டாம் என்பதும், தர மறுக்கும்போது 'தா' என்று வாய் கிழியக் கத்துவதும் தான் தமிழனின் தனிக்குணமோ?

தமிழர் ஒருவர் மாகாண ஆட்சி பீடத்துக்குச் செல்ல வேண்டுமென்று வரிந்து கட்டிக்கொண்டு தேர்தலில் குதித்தால் மட்டும் போதுமா? அவர்களுக்காக வாக்கு வேட்டையாடுவோர், வீடுவீடாகப் போய் 'தமிழனுக்கு வாக்களியுங்கள்' என்று கேட்டால் மட்டும் போதுமா? முதலில் அந்தத் தமிழர் வீடுகளில் எத்தனை பிள்ளைகள் தமிழைப் படிக்கிறார்கள் என்று கணக்கெடுப்பு நடத்த வேண்டாமா? அவர்களுக்குத் தமிழைக் கற்பிக்க ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க வேண்டாமா?

**கொஞ்சம் 'சீரியஸாக'ச் சிந்திக்க வேண்டிய ஒரு காலகட்டத்துக்கு வந்துள்ளோம். புலம்பெயர்ந்த நாட்டில் எங்கள் பரம்பரையை, வெறுமனே பெயரளவால் தமிழராக வாழ விடப் போகின்றோமா? அல்லது, பேசும் மொழியால் தமிழராக்கப் போகின்றோமா?**

★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரமேற்றான்பரிசு கெட்டான்

~ கவிஞர் வி. கந்தவனம்

காய்ந்த தோற்றம் கவரும் வட்டக்
கண்க ளாயின் கவலைகள்
தோய்ந்த பார்வை தொங்கு கூந்தல்
துன்புறுத்தும் துடியிடை
தேய்ந்த திங்கள் திரும்பி நின்று
தென்பு செய்யும் திருநுதல்
ஆய்ந்த வன்ன நடைப யின்றென்
னருகில் வந்தே அமர்ந்தனள்.

சூழ்ந்த மேகச் சோகம் நீக்கித்
துலங்க வெண்ணும் நிலவென
வீழ்ந்த போதும் மேலெ ழும்ப
விழையும் முல்லைக் கொடியென
ஆழ்ந்த அம்புக் காயம் ஆற்ற
ஆவ லுற்ற மானென
வாழ்ந்து காட்டத் துணியு மாபோல்
வாயி தழ்கள் பூத்தனள்.

தள்ளி வையுன் கவலை யெல்லாம்
தக்க வாறு சரிவரும்
கள்ள மில்லா துள்ள தெல்லாம்
சொல்லு வாயேல் கதையினை
வள்ளி தாக எழுதி வெல்ல
வல்ல வாய்ப்பைச் செய்யலாம்
பிள்ளை யென்னப் பின்வி தத்தில்
பேச லுற்றாள் பேதையே!

உரிமைப் போரில் குண்டு வீச்சால்
உயிரி ழக்கத் தந்தையார்
அரிய தாயும் நானு மூர்விட்(டு)
அலைந்து லைந்து கடைசியில்
திருநெல் வேலி சேர்ந்து வாழ்ந்த
போதில் ஓர்நாள் தேடியெ
பெரிய மாமி பிள்ளைக் கென்னைப்
பேசி வந்தாள் திருமணம்.

பெடிய னுக்கு வேலை யொன்றும்
பெரிய தாக இல்லையால்
பிடிகொ டாது பேசி அன்னை
பெரிய மாமிக் கெதுவுமே

முடிவு சொல்லா தனுப்பி மாதம்
மூன்றின் பின்னிவ் வாவணப்
படியி லுள்ள பேர்வழி பெண்
பார்க்க வந்தார் தாயுடன்.

கனடாநாட்டின் பிரசை என்றும்
கதிமி குந்த தொழிலுமென்
றனைய கூற ஆர்வம் மீற
அன்னை உற்றுக் கேட்டனள்
எனைத் தனக்குப் பிடித்த தென்றார்
எனக்கும் அஃதேல் கனடாவில்
எனைய ழைத்து மணப்ப தாக
இசைவு கேட்டுச் சென்றனர்.

அடுத்த நாளும் காண வந்தார்
அன்பு வார்த்தை பேசினார்
எடுத்த ஓய்வு முடிவ தாலே
மீள வேண்டும் என்றனர்
பிடித்த தாக மீண்டும் கூறிப்
பிரிவ தற்கு வருந்தினார்
கொடுத்து வைத்தாய் என்ன அன்னை
குதுக லத்தில் நீந்தினேன்.

சொன்ன வாறே சென்ற பின்னர்
தொடர்பு கொண்டார் ஆர்வுடன்
என்னை இங்கு தன்பொ றுப்பில்
எடுப்ப தற்கும் ஒழுங்குகள்
பின்ன லின்றிச் செய்து மென்ன
பேர்கொ ழும்புக் கனடிய
மன்னு தூதர் அனும திக்குள்
மாதம் ஈரப்த் தாயின.

அந்த மில்லா அன்ப ருக்கா
யத்த நாளைச் சொன்னதும்
வந்து கூட்டிப் போவ தாக
மகிழ்ந்து வாக்குத் தந்தனர்
வந்தி றங்கி வாஞ்சை யோடு
மாந கர்வான் துறையிலே
சொந்த மாகப் போகு மாளைத்
துருவி எங்கும் தேடினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப் பக்க மேனும் ஆளைக்
காண வில்லை ஏங்கினேன்
பிந்தி விட்டார் போலு மென்று
பேச்சி லாதே தங்கினேன்
அந்த ரப்பட் டேதொ லைபே
சியைய டித்துப் பேசினேன்
அந்தப் பேரில் யாரு மில்லை
என்ற தாங்கோர் பெண்குரல்!

வாட கைநல் வண்டி ஒன்றில்
வைத்தி ருந்த முகவரி
வீடு தேடிக் கண்ட போதில்
வேறொ ருத்தி யோடவர்
கூடி வாழ்ந்து குழந்தை ஒன்றும்
பெற்றி ருக்கும் கூத்ததன்
பாட றிந்து கேடு நொந்து
பண்பு ணர்ந்து திரும்பினேன்.

யாரு மில்லாக் கார ணத்தால்
அகதி கோர விழைகிறேன்
ஊருக் கேக உள்ள மில்லை
உதவி செய்க வென்றவள்
தாரை யாகச் சொரிந்து சொல்ல
தார மாக்கும் நோக்குடன்
பார மேற்றான் பரிசு கேட்டை
பாவை வாழ எழுதினேன்.

*****

## இளைய பாரதி கவிதைகள்

நதி
அறியுமோ
நதிமூலம்

★★★

நான்
இருளில் முளைத்தாலும்
வெளிச்சத்தைத் தருகின்ற
நட்சத்திரம்

★★★

நான்
தனியன்
கொடியோ
கோஷமோ
கொண்டாட
கூட்டமோ
இல்லாத
நான்!
தனியன்

★★★

திருகோணமலை நலன்புரிச் சங்கத்தின்
"திருமலை இரவு"
இராப்போசனமும் ஒன்றுகூடலும்

செப்டம்பர் 23, 1995 சனிக்கிழமை
மாலை 6.00 மணி முதல்
CHURCH OF ST. LAWRENCE, MARTYR
2210 Lawrence Av. E., Scarborough, ON.

தொடர்புகளுக்கு:
S.P: (416) 439-6405, ரவி: (416) 421-7691

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்ந்த ரோஜா..... - பேசும் ஆசிரியரின் பேனா!.......

# ஈழ விடுதலைப் போராட்டமும், வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் பங்களிப்பும்

சமாதானம் என்று சொல்லிக் கொண்டு வெற்றியீட்டி ஜனாதிபதி பதவியில் அமர்ந்த சந்திரிகாவின் 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையினால் பரிதாபமாகக் கொல்லப்பட்ட பொது மக்களுக்கும், இவ் இராணுவ நடவடிக்கையை 'புலிப்பாய்ச்சல்' அதிரடித் தாக்குதலினால் முறியடிக்கும் போது தங்கள் உயிரைத் தியாகம் செய்த போராளிகளுக்கும், மணலாற்றில் வீரச்சாவடைந்த 180 போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் வெளிநாடுகளில் வாழுகின்ற ஈழத் தமிழர்கள் பங்களிக்க வேண்டியது இன்றைய கட்டாயம். வெளிநாடுகள் இலங்கை அரசாங்கத்திற்குக் கொடுக்கின்ற உதவிகள் எமது உடன் பிறப்புக்களைக் கொல்வதற்கே பயன்படுத்தப்படுகிறது என்பதை வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு எடுத்துக் காட்டுவது அவசியம். வெளிநாட்டு அரசாங்கம் கண்டித்துக் கடிதம் அனுப்பிவிட்டது என்று எமது எதிர்ப்பைக் காட்டாது வெறுமனே இருந்துவிட்டால் எம் இனத்திற்கு நாம் செய்த துரோகமாகாதா........?

எமது மண்ணை மீட்பதற்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்யும் போராளிகளை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். எமக்குக் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் வேற்றுமையிலும் ஒற்றுமையாக வேண்டியது இன்றைய கட்டாயமாகின்றது. மாற்றுக் கருத்தைக் கொண்டிருப்பவர்கள் ஒத்துழைக்க முன்வராவிட்டாலும் எதிர்க்காமல் ஒதுங்குவதே மேல்.....

வி. எல். ஆனந்த்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது ஆண்டு மலர்

ரோஜா

மாத மலர்

மலர்.3 இதழ்.9

ஆகஸ்ட் 5, 95 - செப். 5, 95

ஆசிரியர்.
*வி.எல். ஆனந்த்.*

பிரசுரம்/விளம்பரம்/விநியோகம்.
***'ரோஜா' பப்ளிகேஷன்ஸ்***

வடிவமைப்பு/அச்சமைப்பு/
அச்சுவேலை
*எல். கிரிஷோத் ரைப்செட்டிங்*

அட்டை வடிவமைப்பு.
*கரன் கிராப்*

ஓவியம்
**கருணா**
**லவன்**

அட்டைப்படம்.
**கருணா** (கிறியேட்டிவ் போட்டோ)

Articles/Advertisements
TEL: (416) 425 2884
FAX: (416) 425 2625
Address:-
"ROJAH"
F.P.P.O., P.O.BOX 45593,
747 DON MILLS RD,
DON MILLS,
ON. M3C 3S4. CANADA.

# வாசகரின் பேனாவிலிருந்து.....

*மாதாந்தம் மலரும் 'ரோஜா'விற்கும், அதனைத் தொகுத்துத் தரும் ஆசிரியருக்கும், வாசகர்களில் ஒருவரான எனது பாராட்டுக்கள்.*

*'ரோஜா' அழகிய மலர். இதேபோல் 'ரோஜா' சஞ்சிகையில் அடங்கிய தத்துவங்களும் அழகானவையும், அறிவைத் தருபவையுமே.*

*முக்கியமாக சிறுவர் பூங்காவில் வரும் 'நம்பிக்கை நற்சித்திரம்' பகுதி மேலும் வளர்ச்சியடைய வேண்டும். ஒவ்வொரு பிள்ளைகளும் அதைத் தொடரப் பெற்றோர் வழிகாட்ட வேண்டும். பெற்றோர்தான் பிள்ளைகளின் வழிகாட்டிகள். புத்தகங்களை வாசித்தால் அறிவைப் பெற்றுவிடலாம். முக்கியமாக நான் படித்தவைகளில் வசந்தா டானியல் எழுதிய 'அன்பினால் மட்டும்தான்' என்ற கட்டுரை என்னைக் கவர்ந்தது. இதைப் வாசித்ததால் பிள்ளைகள் வளர்ப்பிலும் எனக்குக் கஷ்டம் தெரியவில்லை. இதேபோல் ரோஜாவில் வரும் 'நம்பிக்கை நற்சித்திரம்' பகுதியைத்தான் முதலில் பிள்ளைகளுக்குப் வாசிக்கக் கொடுப்பேன். வாசிக்கும் பழக்கமிருப்பதால் பிள்ளைகளை நல்ல அறிவுள்ளவர்களாக ஆக்க முடிகிறது. எனவே வாசித்தால் பிள்ளைகள் நல்ல அறிவு, பண்பு, அன்பு எல்லாம் பெறுவார்கள். இந்த வகையில் 'ரோஜா' சஞ்சிகைக்கு எனது நன்றிகள்.*

*அன்பின் வாசகர்*
*திருமதி. ச. பாலராசா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை நற்சித்திரம் — சிறுவர் பூங்கா



எனது பெயர் தயானந்தி. எனது தகப்பனார் பெயர் தியாகலிங்கம், தாயார் சிவச்செல்வி. நான் இலங்கையில் மன்னார் மாவட்டத்திலுள்ள அடம்பன் வைத்தியசாலையில் 1984ம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் திகதி பிறந்தேன். எனது பெற்றோருக்கு என்னுடன் சேர்த்து மூன்று பிள்ளைகள். ஒரு அண்ணன் பெயர் லக்ஸ்மகாந், தங்கை பெயர் நிருபா. எனது ஆரம்பக் கல்வியை எமது கிராமத்தில் எமது தாய்மொழியாகிய தமிழில் பயின்றேன். அவ்விடம் 1ம், 2ம் வகுப்பு வரை படித்தேன். 1993ம் ஆண்டு 3ம் வகுப்பு கனடாவில் (North York) வடயோர்க் ஓ' கோனர் பாடசாலை (O' Connor Public School) யிலே தொடங்கினேன்.

இப்பாடசாலையில் எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் படிக்கிறேன். பிரஞ்சு மொழியை ஒரு பாடமாகவும் படித்துக் கொண்டிருக்கிறேன். எனது தாய் மொழியாகிய தமிழ் மொழியை கனடாவிலுள்ள தமிழ் பெரியவர்களின் உதவியுடன் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும், வெள்ளிக் கிழமைகளில் இந்து சமய பாடத்தையும் படித்துகொண்டிருக்கின்றேன். கனடாவில் எனது தாய் மொழியை படிக்க வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். எனது வீட்டிலும் அப்பா, அம்மா, சகோதரங்களும் தமிழ் பேசுவதால் நான் பாடசாலையில் படிக்கும் தமிழை விளங்கிக் கொள்ள இலகுவாக இருக்கின்றது.

எனது பொழுது போக்கு முத்திரை சேர்த்தல், தொலைக்காட்சி (T.V)யில் பிள்ளைகளின் நிகழ்ச்சிபார்த்தல், சிநேகிதிகளுடன்விளையாடுதல். எனது விருப்பம் ஒரு சிறந்த வைத்தியராக படித்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டு மென்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு 'பேனா'வின் சுயசரிதை

இன்று எங்களுடைய வீட்டுக் கழிவுப் பொருட்களை குப்பைத் தொட்டிக்குள் போடுவதற்காக எடுத்துச் சென்றிருந்தேன். கழிவுப் பொருட்களை அதற்குள் இட்டுத் திரும்பிய பொழுது "டிக்" என்று ஏதோ காலில் மிதிபடுவதை உணர்ந்து உற்று நோக்கினேன், அங்கு மிதிபட்டது ஓர் உடைந்த பேனா. நான் குனிந்து அதனைக் கையில் எடுத்த பொழுது அந்தப் பேனா என்னைப் பார்த்துக் கேட்டது என்ன அப்படிப் பார்க்கிறாய் நானும் உன்னைப் போல் ஒரு காலத்தில் இளமையாகவும், அழகாகவும் இருந்தவள்தான் என்னுடைய கதையைக் கூறுகின்றேன் கேள் என்று தன்னுடைய சுயசரிதையைக் கூறத் தொடங்கிற்று.

நான் 'ஒறெக்ஸ்' எனும் கூட்டுத் தாபனத்தால் அழகாக உருவாக்கப்பட்டேன். எங்களில் நிறைய நண்பர்கள் இருந்தார்கள். விதம்விதமான நிறங்களிலும், விதம் விதமான வடிவங்களிலும் நாங்கள் விற்பனை செய்யப்படுவதற்காக வியாபார ஸ்தாபனம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த பொழுது மொன்றியலில் வசிக்கும் மாணவன் ஒருவனால் நான் கொள்வனவு செய்யப்பட்டிருந்தேன். என்னை வாங்கிய மாணவன் முதன் முதலாக பரீட்சை எழுதப் போகும் பொழுது என்னையும் எடுத்துச் சென்றான். அந்த மாணவன் தன்னுடைய பரீட்சையில் முதல் பிரிவில் சித்தியடைவதற்கு என்னுடைய பங்களிப்பும் முக்கியமானதொன்று என்றே சொல்லலாம். அவனுக்கு என்மேல் பாசமும், நன்மதிப்பும் இருந்தது. நானும் அப்படித்தான் அவன் எங்கு சென்றாலும் அவனுடைய சட்டைப் பைக்குள்ளேயே எந்நேரமும் இருந்து கொண்டிருந்தேன். அவன் தன்னுடைய காதலிக்குக் கடிதம் எழுதுவதற்கும் என்னைத்தான் பலமுறை உபயோகப்படுத்தி வந்தான்.

நான் நன்றாக இருப்பது அந்த ஆண்டவனுக்கே பொறுக்கவில்லைப் போல் இருக்கிறது. ஒரு நாள் இரவு அந்த வாலிபன் என்னைத் தன்னுடைய சட்டைப் பைக்குள்ளிருந்து தூக்கிய பொழுது நான் தவறி விழுந்து விட்டேன். என்னுடைய பல் உடைந்ததோடு முதுகெலும்பிலும் ஒகூ வெடிப்பு ஏற்பட்டு விட்டது. அத்துடன் என்னுடைய வாழ்க்கை முடிவடைந்து விட்டது என்றே சொல்லலாம். என்னால் அந்த மாணவனுக்கு எதுவித பயனும் இல்லை என்று தெரிந்ததும் நான் அந்த வீட்டின் ஒரு மூலையில் இருந்து என்னுடைய வாழ்க்கையைக் கழிக்கலாம் என்றிருந்தேன்.

ஆனால் மனிதர்களில் சிலர் நன்றியில்லாதவர்கள் என்று அறிந்திருக்கிறேன் அதைவிட இளமை, அழகு கூட நிலையற்றவை. அன்று எனக்குப் பாசம் காட்டியவர் இன்று என்னுடைய இயலாமை கண்டு என்னை வீசியெறிந்து விட்டார். என்னுடைய கவலையைச் சொல்வதற்கு இன்றுதான் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது" என்று அந்தப் பேனா தன்னுடைய சுயசரிதையைக் கூறி முடித்தது.

**வாணி**
மாணவர் அறிவாலயம்
மொன்றியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் நண்பனுக்குத் தேவை பணமா....? பாசமா......?

ஒரு ஊரில் வேலன் எனும் ஓர் விவசாயி தனது மனைவி மக்களுடன் மிக ஆனந்தமாக வாழ்க்கை நடத்தி வந்தான். இவனிற்கு குமரன், அமரன் என இரண்டு ஆண் பிள்ளைகள் இருந்தார்கள். குமரன் தன் குடும்பத்தினரிடமும், தோழர்களிடமும் மிக அன்பாகப் பழகுவான். ஆனால் அமரன் எல்லோருடனும் சுயநலம் கருதியே பழகுவான். குமரனிடம் கூட ஏதாவது தேவை இருந்தால் மட்டுமே பழகுவான்

இதனால் இரக்க மனம் படைத்த குமரனிற்கு ஏழை நண்பர்களும், சுயநலம் கருதும் அமரனிற்கு பணக்காரர்களும் நண்பர்களாக இருந்தார்கள். குமரனின் நண்பர்களால் குமரனிற்கு எந்த உதவிகளையும் செய்யும் வசதி எவர்களிற்கு இல்லையென்றாலும், அவர்கள் அவன்மேல் இயன்றளவு அன்பு செலுத்தி வந்தார்கள். அமரனின் நண்பர்களால் அமரனிற்கு வேண்டிய எந்த உதவிகளையும் செய்ய முடிந்தாலும் எதுவுமே அவர்கள் செய்யவில்லை. ஏனெனில் அவர்களும் அமரனைப்போல் அமரனிடம் உதவிகளை எதிர்பார்த்தே பழகி வந்தனர்.

பல வருடங்கள் கழிந்த பின், குமரனின் நண்பர்கள் அவனுடைய உதவியால் படித்துப் பட்டதாரிகளாக வந்தார்கள். அமரனின் நண்பர்களோ பல தீய பழக்க வழக்கங்களை கையாளத் தொடங்கினார்கள். அவர்களின் தீய பழக்க வழக்கங்களிற்கு அமரனும் ஆளாகினான்.

சில மாதங்களுக்குப் பின்னர் அமரன் தனது நண்பர்களுடன் சேர்ந்து திருட ஆரம்பித்தான். அவன் எந்தத் தப்பும் செய்யவில்லை என்றாலும், முழுப் பழியும் அவன் மீதே விழுந்தது. ஏனெனில் அமரனுடைய நண்பர்கள் நிறையப் பணத்தை செலவழித்து தாங்கள் செய்த குற்றத்தை அமரனின் மீது போட்டு விட்டு அவர்கள் தப்பித்துக் கொண்டனர்.

தனது நண்பர்களின் குள்ளப் புத்தியை உணர்ந்து திருந்திய அமரன், குமரனிடம் வந்து தன்னைக் காப்பாற்றுமாறு கேட்டுக் கொண்டான். தனது தம்பி மீது இரக்கம் கொண்ட குமரன் தனது நண்பர்களின் உதவியால் அமரனை அக் குற்றத்திலிருந்து காப்பாற்றினான்.

அந்நாளில் இருந்து அமரன் ஓர் உண்மையான நண்பனிற்கு பணம் தேவையில்லை. நல்ல மனம் இருந்தால் மட்டும் போதும் என்பதை உணர்ந்து குமரனைப் போல் வாழத் தொடங்கினான்.

~ பா. ஹரிகரன்

சிறுவர் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.

தொலைநகல்:
(416) 425-2625



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவதாண்டில் காலடி பதிக்கும் 'ரோஜா' சஞ்சிகை
மேலும் வளர்ந்து மணம் வீச எமது வாழ்த்துக்கள்!




ஸ்ரீ சிவா ஜுவலறி

SRISIVA JEWELLERY

721 Bloor St. W., Toronto, Ontario, M6G 115

**(416) 531-4867**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YARLTON MARKET

9 CLINTWOOD GATE #4 & 5A
On Victoria Park Ave

**Photocopying & Fax Services**

Tel/Fax: (416) 445-5352
Tel: (416) 445-5763

Lotto 649, TTC டிக்கற், முத்திரை, Metro Pass
இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள்
பால், பழம், மரக்கறி வகைகள்,
உடன் இறைச்சி, கடலுணவு வகைகளுக்கு



## யாழ்ரன் மார்க்கற்

---

## மஞ்சுளா பாஷன்

வெகுவிரைவில் எமது கோடைகால மலிவுவிற்பனை நடைபெறவுள்ளதை மகிழ்வோடு அறியத்தருகிறோம்!

## Manchulaa Fashion

5818 Sheppard Ave. E., Scarborough, ON
Tel: (416) 297-9875, 297-7011
Fax: (416)297-7595


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சங்கள்

சூர்யா, ராஜி கதைத்தபடியே நடந்தனர்.

ஆ சூர்யா சொல்ல மறந்து விட்டேன். அண்ணனுக்கு *next month wedding*. அம்மா லெட்டர் போட்டிருக்கிறா. கொழும்பில் வைத்துத்தான் செய்யப் போகினமாம். அவகூட கொழும்பில்தான் வேலை செய்கிறாவாம்.

அது சரி ராஜி எவ்வளவிற்கு உங்கள் அண்ணா விலை போனான்.

அப்படியெல்லாம் நாம் வாங்குபவர்கள் இல்லை. என் அண்ணாவைப் பற்றி உங்களுக்குத் தெரியாது சூர்யா. ஆனா சூர்யா, அவர்களிடம் ஒன்றும் வேணாம் என்று கூறியும் தம் பிள்ளைக்குத் தாம் கொடுக்கிறோம் என்று கொடுக்கிறார்களாம்.

பார்த்தீரா ராஜி நீங்கள் கேட்கவில்லை அவர்கள் கொடுக்கிறார்களாம். இங்கு கல்யாணச் சந்தையும் பெண் தன்னை விற்பதற்கே பணம், பொருள் கொடுக்கிறாள். வேடிக்கையாக இல்லை.

ராஜி ஒன்றுமே பேசாது மௌனமாக நடந்தாள்.

என்ன ராஜி என்மேல் கோபமா. நடமுறையில் நடப்பதைத்தான் சொன்னேன். பிடிக்காட்டி மன்னித்துக் கொள்ளும்.

சூர்யா கேட்டுக் கொண்டபோது ராஜியின் மௌனம் ஓடியே போய்விட்டது.

இரண்டு வாரம் கழித்து.......

சூர்யா உங்களை எங்கெல்லாம் தேடுவது. அண்ணா காட் அனுப்பியிருக்கிறார் உங்களுக்கும் கொடுக்கச் சொல்லி, இந்தாங்கள்.

சூர்யாவிடம் ராஜி காட்டைக் கொடுத்த பொழுது அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். ராஜனோடு ஒருநாள்தான் பழகினேன் என்னை நினைவு கொண்டு தன் திருமணத்திற்கு அழைத்திருக்கிறானே. உண்மையில் அவன் எத்தனை பண்பு மிக்கவன். கட்டாயம் போகவேணும் திருமணத்திற்கு....

---

**இணுவையூர் B. R. ரஞ்சனி**

---

என்ன சூர்யா சிந்தனை. கல்யாண வீட்டிற்கு நிச்சயம் நீங்கள் வரவேண்டும். அதுவும் எனக்குத் துணையாக....

என்ன உங்களுடன் வரவா. நீங்கள் வேளைக்குப் போகவேணும். நான் முதல்நாள் வந்தாலே போதும். நீங்கள் முதல் போங்கள் ராஜி. வாய் கூறியது மனமோ என்னை துணையாக வரச்சொல்லிக் கூப்பிடுகிறாய். எனக்கும் உன் துணையாக வர விருப்பமில்லையா என்ன. காலம் முழுதுமல்லவா வர சித்தமாயிருக்கிறேன்.

ஆனால் நான் எங்கே நீயெங்கே. பணத்தால் உயர்ந்தவளெங்கே நடுத்தர வர்க்கத்தவன் நான் எங்கே. வேண்டாம் நாம் தனியாவே செல்வோம்.

என்ன சூர்யா என்னோடு வரமாட்டீர்களா?
இல்லை ராஜி நீங்கள் முதல் போங்கள் நான் பிறகு வருகிறேன். இரண்டு பேரும் சேர்ந்து போனால் வீண் வம்பாகி விடும் ராஜி.

ஏன் சூர்யா பயப்படுறீங்கள். நானே ஓம் என்று வரும்போது ஆண் நீங்கள் ஏன் தயங்குகிறீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது வந்து ராஜி...... சூர்யா இழுத்தான்.

இனி ஒன்றும் கதைக்க வேண்டாம். என்னோடு *Saturday* வருகிறீங்கள். உரிமையோடு சொல்லியவண்ணம் காற்றாகப் பறந்தாள்.

சனிக்கிழமை பிற்பகல் ராஜியும் சூர்யாவும் கொழுப்பிற்குப் புறப்பட்டார்கள். ராஜிக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. சூர்யாவிற்கோ தயக்கமும் சங்கடமுமாக இருந்தது.

இரண்டு பேரும் ஒன்றாய் சென்றால் அவர்கள் வீட்டில் என்ன நினைத்துக் கொள்வார்களோ.
தயங்கியதை ராஜியிடம் கேட்டான்.

நான் அண்ணாக்கு முன்பே கூறிவிட்டேன் சூர்யா. இரண்டு பேரையும் அழைத்துச் செல்வதற்கு அண்ணாவே ஸ்ரேஸனுக்கு வரப்போகிறார் பாருங்கள்.

அதன் பிறகு இருவரும் ஒன்றும் பேசவில்லை.

ராஜனின் திருமணம் மிகவும் சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. ராஜி மிக ஆடம்பரமில்லாது சாதாரணமாக ஆனால் அழகாக, பட்டுப்புடவை உடல் முழுவதும் தழுவியிருக்க தன் நீண்ட கூந்தலை பின்னலிட்டு அழகாக குஞ்சம் வேறு கட்டியிருந்தாள். அது அவள் நடந்து திரியும் போது அசைந்தபடி மிகவும் அழகிற்கு அழகூட்டியது.

சூர்யாவுடன் ராஜியின் குடும்பத்தார் அன்பாகவும், பண்பாகவும் பழகினர். ஆனால் அங்கு ஒருத்தனைத்தான் சூர்யாவிற்குப் பிடிக்கவில்லை. ரமேஷ் ராஜியின் மச்சான்.

ராஜி இங்கவாயேன் அதை எடுத்துத்தா கொண்டுபோ என்று ராஜியை அழைத்த வண்ணமும் அவளை ஒட்டியபடியும் திரிந்தான். சூர்யாவிற்கு அதைப் பார்க்க எரிச்சலும் பொறாமையாகவும் இருந்தது.

ராஜிக்கு சூர்யாவைப் பார்க்க சிரிப்பாக இருந்தது. வேண்டுமென்றே சூர்யாவை சீண்டி விடுவதற்கு ரமேசுடன் வலிய பேசித் திரிந்தாள்.

சூர்யா, ஏன்தான் இப்படி பொறாமைப்படுகிறேன், எரிச்சல்படுகிறேன் என்று எண்ணினான்.

ரமேஷ் கொழும்பிலுள்ள வெளிநாட்டு வங்கியொன்றில் கைநிறைய சம்பளத்துடன் பொறுப்பான பதவி வகித்தான்.

ராஜனும் ரமேசும் ஒரு வயதையொத்தவர்கள். ராஜி பிறக்கும்போது ரமேஷின் வீட்டாரும், ராஜியின் வீட்டாரும் ரமேசுக்காகத்தான் ராஜி பிறந்தாள் என்று மனதில் நினைததிருந்தனர். ரமேசிற்கு தனக்குத்தான் ராஜி என்று இருவீட்டாரும் நினைத்திருப்பது தெரியும். ஆனால் ராஜிக்கோ அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதனால் தான் ரமேஷ் அவளை உரிமையோடு ஏவியவண்ணம் இருந்தான்.

திருமணம் முடிந்து இருவரும் ஒன்றாகவே புறப்பட்டனர். ரெயினில் வரும்போது சூர்யா மனதில் இதுவரை குறுகுறுத்ததைக் கேட்டே விட்டான். ராஜி யார் அவர் உம்மோடு ஒட்டிக் கொண்டே திரிந்தவர்.

அவரா என் மாமியின் அதாவது என் அப்பாவின் அக்காவின் மகன் ரமேஷ். அதுசரி ஏன் கேக்கிறீங்கள்.

ஒன்றுமில்லை சும்மாதான். மழுப்பினாலும் முகம் காட்டிக் கொடுத்துவிட்டது.

என்ன சூர்யா முகம் என்னவோ போலிருக்கு. அதுசரி ஏன் உங்கள் முகம் திருமணத்தன்று ஒருமாதிரியாக இருந்தது.

என்ன நான் ரமேசுடன் சிரித்துப் பேசியது பிடிக்கவில்லையா..?

நோ நோ அப்படியில்லை.... பலமாக மறுத்தான், அதோடு பேச்சை மாற்ற விரும்பியவனாக....., நான் ஒன்று கேட்டால் கோபிக்க மாட்டாயா ராஜி....? சூர்யா ஒருமையில் அழைத்தது ராஜிக்கு ஆனந்தமாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A.R.K MARKET

**31 St. Dennis Dr. Don mills, ON.**

(Don mills/Eglinton)

உங்கள் அனைத்து தேவைகளையும்
ஒரே இடத்தில் பூர்த்தி செய்து கொள்ள
டொன்மில்ஸ் இல் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்



* தரமான தமிழ் வீடியோ திரைப் படங்கள்.

* ஆடியோ, CD இசைத்தட்டுக்களை
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள....


## ஏ.ஆர்.கே மார்க்கட்

## (416) 421-3429




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AUTO MECHANIC SHOP



உங்களின் சகல
விதமான
திருத்த வேலைகளுக்கும்
எம்மை நாடுங்கள்.
உங்கள் மனநிறைவுக்கு
நாங்கள் உத்தரவாதம்.

- ***Tune-up***
- ***Brakes***
- ***Transmission & Engines rebuilt***
- ***Air-Condition***
- ***Body Work***

*Domestic, European & Japanese car & Vans.*


*We are specialized in*
**HONDA**



***IRIE*** *CA SERVICES*

**86 MELFORD DR, UNIT.5,**
**SCARBOROUGH, ONT.**

*S. Ruban*
**(416) 299-0452**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜி உனக்கு இருக்கிற வசதிக்கு நீ மேலும் படிக்க வேண்டுமா அல்லது உத்தியோகம் பார்க்க வேண்டுமா. பேசாமல் ரமேஷை திருமணம் செய்து கொண்டு வாழலாமே.....

"ஸ்ரொப்பிற் சூர்யா....." ஏன் இப்படிக் கதைக்கிறீங்கள். கத்தினாள் ராஜி.

ரெயினில் அந்த வகுப்பில் அவர்களோடு பயணித்தவர்கள் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தனர்.

ஏன் ராஜி கத்துறீர். உங்கள் வீட்டில் கதைத்தார்கள் ரமேசுக்கும் வயதுபோகிறது ராஜியும் படிப்பு படிப்பு என்று திரிந்தால் எப்போ கட்டி வைப்பது என்று. அதைத்தான் உம்மிடம் கதைக்க.... நீரோ....

என்ன சூர்யா அவர்கள்தான் அர்த்த மில்லாது முடிச்சுப் போட்டால் நீங்களுமா..... அதோடு எனக்கு இஷ்ட மில்லாமல்........ என்னால முடியாது.

எப்படி நீ இப்படிச் சொல்லுகிறாய் இரண்டு வீட்டாரும் சம்மதித்த பின்பு...

என்ன சூர்யா புரியாமல் கதைக்கிறீங்கள். அவர்கள் சொல்கிறார்கள் என்று என்னால் தலையாட்ட முடியாது. நான் படிக்க வேண்டும் முதலில். அதோடு எனக்குள் வேறு ஒருவர் இருக்கிறார். அப்படியிருக்கும் போது எப்படி நான் ரமேஷைக் கட்டுவேன் சூர்யா....

சூர்யா பேசாது இருந்தான். வேறு ஒருவரை ராஜி விரும்புகிறாளா. அது யாராக இருக்கும்... நானா அல்லது வேறு யாருமா.... வேறு ஒருவனுடன் சேர்த்துப் பார்க்க மனம் பாரமாக இருந்தது.

என்ன சூர்யா சிந்தனை. நான் யாரை விரும்புகிறேன் என்று நீங்கள் நினைக்கிறீங்கள் சொல்லுங்கள் பார்ப்போம்.

எனக்கெப்படித் தெரியும் ராஜி உங்களுக்குள் இருப்பவரை. நான் எந்தக் கண்ணாடி மூலம் பார்த்துச் சொல்வது.

என்ன சூர்யா எனக்குள் யார் இருக்கிறார் என்று இன்னுமா உங்களுக்குப் புரியவில்லை.

ராஜி இப்படிக் கூற சூர்யாவிற்கு சந்தோஷமாக இருந்தது. ஆனால் நான் எங்கே அவள் எங்கே. நானோ சாதாரண ஆசிரியரின் மகன் நீயோ முதலாளியின் செல்ல செழிப்பான மகள். மனம் பலதை சிந்தித்தது.



ராஜிக்கு சூர்யாவின் முகபாவம் காட்டிக் கொடுத்தது அவன் தன்னை விரும்புகிறான் என்று. சூர்யா வந்து நான் உங்களை....... மேலே வார்த்தை வராது தடுமாறினாள்.

சூர்யா அவளைத் தொடர்ந்து பேசவிடாது ராஜி உனக்குள் இருப்பது போல்தான் எனக்குள்ளும் உன்னைப் பார்க்கின்ற போதெல்லாம் ஏற்படும். ஆனால் இது நடக்குமா.....? உன் தகுதியெங்கே என் தகுதியெங்கே. எதிர்காலத்தை நினைத்துப் பார்க்கவே நான் இன்னும் தொடங்கவில்லை. முதலில் படித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்து நல்ல வேலையில் அமர வேண்டும். பின் என் அக்காவிற்கு கண்ணிறைந்த கணவரை தேர்ந்தெடுத்து மணமுடித்து வைக்க வேண்டும். இத்தனையும் செய்யவே காலம் வயதைக் கூட்டிச் சென்றுவிடும். இதற்கிடையில் நாம் எப்படி..... ராஜி.

ராஜிக்கு மகிழ்ச்சயாக இருந்தது. சூர்யாவும் என்மீது விருப்பம் கொண்டுள்ளான். குடும்ப சூழ்நிலையால்தான் யோசிக்கிறான்.

ராஜி நீ வீணாக கற்பனையை வளர்க்காதே. பேசாமல் ரமேஷையே கட்டிக்கொள். சூர்யாவிற்கு சொல்வதற்கே கஷ்டமாகிவிட்டது.

பிளீஸ் சூர்யா மேலே கதைக்காதீங்க, பார்வையால் கெஞ்சினாள். அழுகை பொக்கென்று கண்களில் வந்து விட்டது. தன்நிலையை மற்றவர்கள் பார்த்து விடுவார்கள் என்று விருட்டென்று எழுந்து பாத்ரூம் போனாள். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. விக்கி விக்கி அழுதாள் ராஜி. அழுகையை அடக்கிக் கொள்ள முடியாது.

சூர்யாவிற்கு ராஜியின் அழுகையும் ஓடிச்சென்றதும் மனதை தைத்தது. எழுந்து பாத்ரூம் பக்கமாகச் சென்றான். உள்ளுக்குள் அழுவது மெதுவாக வெளியே கேட்டது. சூர்யாவிற்கும் கண்கள் கலங்கி விட்டது. ராஜி அழுவதை ஏனோ அவனால் தாங்க முடியாது இருந்தது.

இரவும் முழுவதுமாக வந்து விட்டது. அந்த வகுப்பிலிருந்த ஒரிருவரைத் தவிர அனைவரும் தூங்கி விட்டிருந்தனர். மற்றவரும் புத்தகம், பத்திரிகையில் ஆழ்ந்திருந்தனர்.

சூர்யா மெதுவாக வாசல் புறம் போய் நின்று இருட்டை வெறித்த வண்ணம் இருந்தான். மனதில் பலவித போராட்டங்கள்.

ராஜி தன்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு முகத்தை நீரால் கழுவினாள். என்றாலும் கண்களிலிருந்து நீர் வடிந்து கொண்டேயிருந்தது. ராஜி மெதுவாக நடந்து மறுவாசல் புறம்போய் நின்றாள். கண்கள் அழுது சிவந்திருந்தது.

சூர்யா முதலில் அவள் வந்து நின்றதை கவனிக்கவில்லை. எதேச்சையாக திரும்பியவனுக்கு ராஜி வந்து நிற்பது தெரிந்தது. மெதுவாக நடந்து அவள் பின் போய் நின்றான். ராஜியோ திரும்பிக் கூட பார்க்காது நின்றாள். ராஜி என்று மெதுவாக கூப்பிட்டான் ராஜி திரும்பவில்லை. பிளீஸ்டா ராஜி திரும்பமாட்டாயா.

ராஜி திரும்பிப் பார்த்தாள். சூர்யா புன்முறுவல் பூத்தபடி இரண்டு கைகளையும் நீட்டினான்.

சூர்யா என்று அழைத்தவண்ணம் அவன் அணைப்பில் புகுந்தாள். மறுபடியும் அழுகை வந்து விட்டது அவளுக்கு.

ஏன் ராஜி மறுபடியும் அழுகை. இங்கபார் இனி அழாதை நான் உன்னிலை எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன் தெரியுமா. ராஜி ஐ லவ் யூ ராஜி. அணைப்பை மேலும் இறுக்கினான்.

தப்பு தப்பு இப்படி அணைப்பில் இருப்பது தப்பு என்று ராஜிக்குப் புரிந்தது. ஆனாலும் அவளிற்கு அந்த ஸ்பரிசத்தில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. முதன் முதலில் ஏற்பட்ட இந்த உணர்ச்சி இருவருக்குமே புதிது.

ராஜியின் முகத்தை கைகளால் ஏந்தி தன் முகத்தினருகே கொண்டு சென்றான். கூடாது இது கூடாது. உள் மனம் கூறியது ஆனால் விலகத் தோன்றாது நின்றாள்.

'டொக் டொக்' யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டு இருவரும் படாரென்று விலகினர்.

ராஜிக்கு முகம் முழுவதும் சிவந்து விட்டது. சூர்யாவை நிமிர்ந்து பார்க்கவே வெட்கப்பட்டாள்.

பெரடெனியா வரும்வரை இருவரும் ஒன்றும் பேசாது இருந்தனர். மனங்கள் இரண்டும் சேர்ந்து ஆனந்தக் களிப்பில் நீந்தியது.

தொடரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள்.......!

~ சிவதாஸ்
(யாழ். மருத்துவ பீட மாணவன்
- இறுதி வருடம்)

மாலையில்
இழந்திடும்
மலரின் நறுமணமல்ல
உன்
நெருடும்
நெஞ்சின் வாசம்
இந்த நேசமுகர்வு
என்னுள்
பாசப் பகிர்வு.....
சோக உதிர்வு....

என் உணர்வுகளை உள்ளெடுத்து
அன்பினை வெளிவிடும்
உந்தன்
ஆத்ம சுவாசத்தில்
கரைந்து விடுகிறேன்

காற்றின்றி
கனக்கும் சுமைகளுடன்
நேற்று வரை
புழுங்கிக் கொண்டிருந்த என்னில்
முல்லைச் சிரிப்பால்
இதய சாளரம் திறந்து
அதில்
கவிதைச் சாரல் தந்தவள்

பருவக் கவர்ச்சிகள்
பறந்து போய்
உருவச் சிற்பம்
சிதைந்து போனபின்
உண்டான சொந்தமிது
இதழ் விரிப்பினை
இதயம் மறந்து ரசித்து விடுகிறேன்
பிரபஞ்சமளவு பிரியத்தினை
பிஞ்சுக் கரத்தின்
பிணைப்பில் பகர்கிறேன்

புரியாத மொழியில் புலம்பிடும்
தன் மழலைக்கு
அர்த்தங்கள் கற்பிக்கும்
தாய் போல்
என் மனக் கீறல்களையெல்லாம்
கோலங்களாக்கினாய்

இன்னும் சொல்ல முடியாது.....
கவிக் கோலங்களால் வரைந்து
விடமுடியாத
உன்
மனக்கோலம்

உதிரத்தில் உறைந்துகிடக்கும்
உணர்வுகள் யாவும்
பேனாவின் மையினுள்
கரைந்து விடுவதில்லை.

******

உங்கள் அனைத்துத் தேவைகளையும்
பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

PRINCESS PLAZA வில்
துவாரகாஸ்

1670 Victoria Park Ave.,
Toronto, Ont.
Tel: (416) 757-1091



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லைதினியின் நான் ஒரு கணவனாகின்றேன்

காதலுக்கு கண்ணில்லை என்பது உண்மைதான். மனதைப் பறிகொடுத்த பின் ஒருவரோடு ஒருவர் இணையாமல் ஒருவரை ஒருவர் நினைத்தபடி வாழும் இன்பத்தில் தான் உண்மையான காதல் வாழ்கின்றது. இதன் சாரமே இக்கதை.

தபாற்கந்தோர் மூடுகிற சமயமாகையால் ஒரே சந்தடியாக இருந்தது. அவனுடைய கவுண்டரைத் தாண்டிக் கொண்டு போவோரும் வருவோருமாக இருந்தனர்.

கண்ணெதிரே ஒரு தந்திப் பத்திரம் நிரப்பப்பட்டுப் பிரிக்கப்பட்டுக் கிடந்தது. எழுத்துக்கள் மேலெழுந்து அவனை நோக்கி வருகிற மாதிரிப் பறந்து கொண்டிருந்தன...

அண்மையில் இந்தத் தெருவுக்கு தபாற்காரனாக வந்தவன் தான் சங்கர். வேலை மாற்றலாகி வந்த அன்றே 'செல்வி. கௌரி' என்ற பெண்ணின் பெயருக்கு இருபத்தைந்து கடிதங்கள் ஒரே நாளில் வந்ததைக் கண்டான். கடிதங்களை அவன் வீடு தேடிக் கொண்டு செல்லும் பொழுது தான் அறிந்தான், வந்ததனைத்தும் அவளுடைய கதைகளுக்கான பாராட்டுக்கள் என்று.

சைக்கிளில் ஒரு காலும் தரையில் ஒரு காலுமாக சைக்கிள் மணியை அடித்து விட்டு, "போஸ்ட்...." என்று குரல் கொடுத்தான். கதவு திறப்பதற்கான எந்த அறிகுறியையும் காணோம். கதவு சாத்தியபடியே இருந்தது. சைக்கிளை ஸ்டாண்டில் விட்டுவிட்டுக் கடிதங்களுடன் கதவை நெருங்கித் தட்டினான்.

ஏற்கனவே ஜன்னலருகே அமர்ந்திருந்தவள் ஜன்னல் சீலையை விலத்தி எட்டிப் பார்த்தாள். சங்கர் நிமிர்ந்து பெயரை வாசித்தான்.

தலையை குனிந்து அவன் முகத்திற்கு நெருக்கமாக முகத்தைக் காட்டி, ஜன்னலின் வழியே ஒரு கையை நீட்டியபடி, "நான் தான் கௌரி.." என்று மலரச் சிரித்தபடி கடிதங்களைப் பெற்றுக் கொண்டாள்.

அந்த இரண்டு.... மூன்று.... நிமிடங்களுக்குள் என்னதான் நேரிட்டிருக்கும்...???

தெருக்கோடியை கடக்கும் வரை சங்கருக்கு அவள் கூப்பிடுகிற மாதிரியும், சிரிக்கிறமாதிரியும் இருந்தது. திடுக்கிட்டு....... பிறகு மனப்பிரமை என்று நினைத்துக் கொண்டான்.

'எப்படி? எப்படி அத்தனை குறைந்த நேரச் சந்திப்பிற்குள் நம் மனதுக்குள்ளே சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து கொண்டு விட்டாள்' என்று






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pillayar Traders

உங்கள் அனைத்து தேவைகளையும்
ஒரே இடத்தில் பூர்த்தி செய்து கொள்ள
ஸ்காபுரோவில் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்



பிள்ளையார் டிரேடர்ஸ்

3630 Lawrence Ave.E., Scarborough, ON.
(at Lawrence & Markham)
Tel: (416) 438-7746



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INTERNATIONAL INSURANCE / FINANCIAL SERVICES
# &
# BST INSURANCE BROKERS
## சர்வதேச காப்புறுதி + நிதிச்சேவை



**A.Veluppillai**
(Life Consultant & Insurance Broker)
**காப்புறுதி ஆலோசகர்**

வாகனம், நெருப்பு, வீடு, குத்தகைக்காரர், படகு, தொழிற்சாலை, விபத்து, கடன், தனிப்பட்ட, மூலதனம், கல்வித்திட்டம், வாழ்க்கை, சுகாதாரம், வர்த்தகம், வலது குறைந்தோர், பிரயாணம், அடமானம், பணம் மீழல், வாழ்க்கை முழுவதும் காப்புறுதி தவணை வாழ்க்கை காப்புறுதி, குறிப்பிட்ட கால காப்புறுதி, குடும்ப காப்புறுதி, குறுகிய கால பணம் செலுத்தல்

Nine continuous years in Canadian Insurance Industry
Life Section - Under International Insurance Property Section- Under BST Insurance
கனடாவில் 9வருட காப்புறுதி அனுபவமுள்ள ஆலோசகர் எப்பொழுதும் சிறந்த தேவைகள் உங்களுக்குண்டு. சகல காப்புறுதி விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும்.

*அழையுங்கள்:-*

**Tel: (416) 499-9596**
**Fax: (416) 499-9382**

**2190 Warden Ave, (at Sheppard Ave. E.)**
**Suite. 203, Scarborough, ON.**

We represent oldest, largest, leading, well managed mutual and stock insurance companies.
We shop around, the BEST for our client's needs, Affordability, and choice.

**We arrange all types of Insurance**

எம்மால் சகல வித காப்புறுதிகளும், உலகில் சிறந்த காப்புறுதி ஸ்தாபனங்களில் நியாயமான விலையில் உத்தரவாதத்துடன், உங்கள் விருப்பத்திற்கமைய, உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வண்ணம் ஒழுங்கு செய்து வழங்கப்படும்.

**ஆயுள் காப்புறுதி விசேட ஆலோசனைகள் உண்டு.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியந்து கொண்டேயிருந்தான் சங்கர்.

அவளைக் கண்ட நாள் முதல் அவள் எழுதும் தினசரிப் பத்திரிகைகளைச் சேர்க்கலானான். இத்தனை கடிதங்களும் அவளுக்கு வரக் காரண-மான அந்தக் கதையைத் தேடிப் படித்தான். பத்திரிகைகளில் வரும் சிறுகதைகளைப் படிக்கின்ற வழக்கம் உள்ளவன் தான் சங்கர்.

ஆனால். அவள் எழுதிய இந்த மாதிரியான..... காதலுக்குப் புதுப் புது விளக்கம் கொடுக்கும் கதைகளைப் போல் வேறு எந்த கதையிலும் அவன் படித்தது கிடையாது. மனதுக்குள் அவளைப் பாராட்டினான்.

சாதாரணமாய் அடுக்கிய தினசரி கலைந்தாலே கோபம் வந்துவிடும் சங்கருக்கு. நயமாக எடுத்துச் சொல்லியும் அம்மா அவ்வப்போது மாவு சலிக்க அன்றைய தினத்தாளாக அதுவும் கௌரியின் கதையுள்ள பக்கமாக எடுத்துச் செல்வது வழக்கமாகி விட்டது. மாலையில் தான் சங்கருக்கு கதைகளைப் படிக்க நேரம் கிடைக்கும்.

தேடினால்...... சமையலறை குப்பைத் தொட்டியில் எண்ணெயும், மாவுமாகக் காட்சியளிக்கும் அம்மாவின் இந்தச் செய்கை அவன் இதயத்தையே காயப்படுத்துவது போல் இருந்தது.

நாட்கள் மின்னல் வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தன.

அவளுக்கு வரும் விமர்சன கடிதங்களை ஒரே நாளில் கொடுக்காமல் மறைத்து வைத்து தினமும் ஓரிரு கடிதங்களாக கொடுக்கும் சாக்கில் அவளைப் பார்த்து வந்தான். இந்தச் சந்திப்பு இருவர் மனதிலும் காதலாக உருவெடுத்தது. கண்ஜாடையாலேயே வளர்ந்த அந்த காதலுக்கு வார்த்தைகளுக்கு இடமில்லை.

அன்று..... தபாலைக் கொடுக்கச் சென்ற போது ஜன்னல் ஓரம் அவளைக் காணவில்லை. கௌரியின் தகப்பன் வாசலில் நின்று கடிதங்களை வாங்கினார். வழக்கத்திற்கு மாறாக இப்படி நடந்தது சங்கருக்கு ஏதோ போலாகி விட்டது.

கௌரியின் தகப்பன் வீட்டிற்குள் நுழைந்ததும் ஏமாற்றத்தோடு மீண்டும் ஜன்னலை நோக்கிப் பார்வையை விட்டான்.

அங்கே அவள் முகம் தெரிந்தது....

அவசர அவசரமாய் அவன் பக்கம் ஒரு முத்தத்தைப் பறக்க விட்டு விட்டுத், தலையை உள்ளே இழுத்துக் கொண்டாள்.

எல்லாம் நிஜமாகவே நடந்தவை தானா? அல்லது இடை வெளியில்லாத கனவுகளா....? அவன் மனதில் மேலோங்கியிருந்த விஷயம் ஒன்றே ஒன்றுதான. 'அதை அவளிடம் கேட்பதா? வேண்டாமா?' இன்று அதற்குப் பதில் கிடைத்து விட்டது.

அன்று காலை தபால்களை சேகரிக்கக் கந்தோருக்கு போனபோது, அடுத்த வாரத்திலிருந்து சங்கருக்கு தலைமை தபாற்கந்தோரிலே வேலை என்ற செய்தி கிடைத்தது. ஒருபுறம் மகிழ்ச்சியும், மறுபுறம் 'இனி முன்போல் கௌரியைப் பார்க்க முடியாதே' என்ற தவிப்பும் இருந்தது. அவள்தான் காதலுக்குச் 'சம்மதம் காட்டி விட்டாளே' என்ற சமாதானமும் இருந்தது மனதுக்குள்.

மூன்று, நான்கு நாட்களாக கௌரியைக் காணவில்லை. அவளுடைய தகப்பன் தான் கடிதங்களை வாங்கிச் சென்றார். 'காதல் முளைக்கும் முன்னே ஒரு வில்லன் முளைத்து விட்டான்' என்று தோன்றியது சங்கருக்கு.

அன்றும் கௌரி வீட்டு வாசலில் நின்ற வாடகைக் காரில் இருந்து சக்கர நாற்காலி வண்டியை இருவர் வெளியே இறக்க முனைந்துகொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய வீட்டிற்குள் நுழைவதற்குச் சந்தர்ப்பம் பார்த்து, சங்கரும் சக்கர நாற்காலியைத் தூக்கிக் கொண்டு உள்ளே செல்லக் கைகொடுத்தான்.

முன்ஹாலில் இருந்து சக்கர நாற்காலியை அறைக்குள் உருட்டிச் சென்றார் தந்தை. சற்று நேரத்தின் பின் வண்டியில் இருந்தபடியே கையால் உருட்டிக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள் கௌரி. ஒரு நிமிடம் நிலை தடுமாறினான் சங்கர்.

அவளுக்கு விபத்தொன்றில் இரு கால்களுமே ஊனமாகி விட்டதை அன்றுதான் அறிந்து கொண்டான். வண்டிச் சில்லு உடைந்ததன் காரணமாகத்தான் அவளை ஜன்னல் ஓரம் காண முடியவில்லை, என்ற உண்மை விளங்கியது. அவனையும் அறியாமல் அவன் உடலில் ஒருவித நடுக்கம் ஏற்பட்டது. உடம்பெங்கும் வியர்க்கிற மாதிரி இருந்தது. தெருவுக்கு வந்தபோது 'சில்லென்று' ஒரு குளிர்காற்று அவனைத் தழுவிக் கொண்டது.

தபாற்கந்தோரிலேயே வேலையாகி விட்டதால், முன் போல் கௌரியைப் பார்க்க முடியாமல் போய் விட்டது. ஆனால் அன்றிலிருந்து ஏதோ யந்திரத்தனமாய் இருந்தானே தவிர எதிலும் அவன் மனம் செல்லவில்லை. அறிய முடியாத கவனம் எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்தது. வேலையில் மூழ்கினால்தான் இந்த நினைவை விரட்ட முடியும் என்ற அவன் நினைவுக்குத் தோல்வியே கிடைத்தது. அவனால் கௌரியை மறக்க முடியவில்லை. அவனுக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது.

நாளாந்தம் சங்கரைக் காணாது ஏமாற்றமடைந்தாள் கௌரி. புதுத் தபாற்காரனைக் கண்டாள். 'மனசுக்குள் குறுகுறுத்துக் கொண்டிருந்த சங்கர் எங்கே?' என்ற கேள்வியின் பதிலின் ஆவல் மனசைக் குடைந்து கொண்டிருந்தது. தைரியம் வரவில்லை, யாரையும் கேட்பதற்கு.

“ஒரே மாதிரியாக இந்த விலாசங்களுக்குத் தந்தி அடிக்க வேணும்” என்ற பெரியவரின் குரல் சங்கரை பழைய நினைவுகளிலிருந்து சுயநினைவுக்கு இழுத்து வந்தது.

மறுகணம்...... ஈமக்கிரியை நடக்கும் இடத்தை நோக்கிச் சங்கரின் சைக்கிள் பறந்தது.

அங்கு கௌரியின் உயிரற்ற உடலின் மீது அவளின் தந்தை “நீ தற்கொலை செய்து கொள்ள என்ன காரணம் என்று சொல்லாமல் போயிற்றியே.......” மகளைப் பறிகொடுத்த துக்கம் கலந்த அழுகை.

சங்கரால் துக்கத்தை அடைத்து வைக்க முடியவில்லை. தன்னை பார்க்க முடியவில்லை என்றதால் அவள் தேடிக் கொண்ட முடிவை நினைத்துக் கதறி அழுதான். தீயில் அவள் உடல் மட்டுமல்ல, சங்கரின் ஆசைகளும், கனவுகளும்.

ஊனமானவள் எந்த விதத்திலும் அவனுக்கு வாழ்க்கைத் துணையாக வரமுடியாது விட்டாலும், அவளுடைய வாழ்க்கை முடிவுக்கு அவன் துணையாக எண்ணிவிட்டான். கௌரியின் தந்தையிடமிருந்து கொள்ளி வைக்கும் பொறுப்பை பெற்றுக் கொண்டான்.

ஆமாம்........ அவள் மீது நெருப்பை அள்ளிக் கொட்டி அவளின் கணவனாய் நின்று ஈமக்கிரியைகளைச் செய்து முடித்தான்.

*****

விரைவில்
இளையநிலா-10
வீடியோ சஞ்சிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது மண் எனக்கு வேண்டும்!

~ மு. சந்திரகலாதரன்

அடிபட்ட மானின் மருட்சி
அவள் கண்ணில் தெரிந்தது!

மெல்லிய விடியலில் குயில்களின் கூவல்
மேன்மையான சங்கீதம் என்றேன்.
துப்பாக்கிச் சனியன்களின் உறுமல் சத்தமே
தூய சங்கீதம் என்றாய் நீ!

உன் தேசம் நிர்வாணமாக்கப்பட்டு
தீயின் வடுக்களும் சாம்பலும் மிச்சமிருக்க
நீ இடிந்த பள்ளியின் வாசலில் நின்று
எதையோ எதிர்பார்த்தாய்!

எனக்கும் உனக்கும்
இடைவெளி இருக்கிறது பெண்ணே!

என்ன உனக்கு பத்து வயதிருக்குமா?
ஊகூம்........ எட்டு..... ஏழு..... ஏதோ ஒன்று!
ஆனால் வயதில் மட்டும் இளமையும்
முகத்தில் முதுமையுமாய் நீ இங்கே!

உன் அப்பா அம்மா எங்கே?
ஆகா! வேண்டாம் நீ திருப்பிக் கேட்டால்
என்னால் சமாதானம் சொல்ல முடியாது.
உனக்கே சமாதானம் சொல்ல முடியவில்லை
உன் தேசத்தின் சமாதானம் நிரந்தர மௌனம்!

அடிபட்ட மானின் மருட்சி
அவள் கண்ணில் மிச்சமிருந்தது!

உன் தேசத்தில் மட்டுமா தீயின் வடுக்கள்
உன் உருவத்தில் கூட ஓராயிரம் காயங்கள்
தீயும், புகையும், சாம்பலும் மிச்சமிருக்க
நச்சுக் காற்றில் எப்படி சுவாசிக்கக் கற்றுக் கொண்டாய்?



உன் தேசம் உனக்கு
துப்பாக்கி கொடுத்தது. தீமையக கொடுத்தது
அனாதை என்று உன்னை அழைத்தது
மொத்தத்தில் நீ
மனித நேயம் தொலைந்த மிருகங்கள் மத்தியில்
பாலுக்கு அழுதாய்..... துப்பாக்கி தந்தார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தேசம்
மனித நேயம் அதன் மதிப்பு
கற்றுக் கொடுத்தது - அதனால் தான்
எட்ட நின்று உன்னைப் பார்த்து
'ச்சோ' கொட்டி விட்டு விலகி விடாமல்
பக்கம் வந்து பரிவாய் கேட்கிறேன்
நீ என்னுடன் வந்து விடு!

அடிபட்ட மானின் மருட்சி நீங்கி
அவள் கண்களில் ஒளி நிறைந்தது!

நீ சொந்தம் தொலைத்தாய்
தேசம் தொலைத்தாய்- கொஞ்சம் போனால்
உன்னையே தொலைப்பாய்!
உன் இளைய பருவம் விளையாடுவதற்காகவே!
வீதி வீதியாய் துப்பாக்கி இரும்புடன்
குண்டு விதைப்புக்கல்ல!
அதனால்தான் கேட்கிறேன்
என்னுடன் வந்து விடு!

அந்தச் சின்னப் பெண்ணின் கண்கள் ஒளிப்பிழம்பாக
அவள் என்னை அமைதியாக நோக்கினாள்!

குயில் பாடும் சங்கீதம் மேன்மை- ஆனால்
குழந்தைகளே துண்டாடப்பட்டு
என் தேசமே எரியும் போது
விடுதலை கீதம்தான் மேன்மையானது!
அதனால்தான் துப்பாக்கி துணையோடு
சுதந்திர விடியல் சமைக்கின்றோம்!

குயில் மட்டுமல்ல- விரைவில்
குழந்தைகளும் பாடுவார்கள்!

கூனிக் குறுகி குழந்தையாகி
அவரின் கண்களில் 'வெட்கம்'!

எனக்குப் பின் வருபவளாவது
எழுதட்டும் படிக்கட்டும்- அதற்காகத்தான்
எதிர்பார்ப்புக்களை நிஜமாக்க
ஏந்திய துப்பாக்கியும், தூரப்பார்வையும்1

என் வயது பத்துத்தான்- ஆனால்
பத்து வயதில் பசியறிந்தேன்
தனிமை அறிந்தேன், துப்பாக்கி அறிந்தேன்
எல்லாவற்றிற்கும் மேலாய் சுதந்திரம் அறிந்தேன்!



ரோஜா ★ ஆகஸ்ட் 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கும் உங்களுக்குமிடையில்
பெரிய இடைவெளி இருக்கிறது!


அவர்கள் நான் அழுதபோது
துப்பாக்கி தந்ததை மட்டும் நீங்கள் பார்த்தீர்கள்
ஆனால் அப்பா, அம்மா அநியாயமாய் இரையாகி
அழுது துடித்த போது, தோளோடு தோள் சேர்த்து
எனைத் தூக்கிப் போனதும் அவர்கள்தான்!
என் தேசத்தின் சுதந்திரம்- சொன்னதும் அவர்கள்தான்!

என் மீது வடுக்கள் அவை
என் பட்டினியின் பரிசல்ல!
இனி வரும் சுதந்தரத்திற்காய்
எழுதப்பட்ட விடுதலை விழுப் புண்கள்!
எங்கள் தேசத்தின் மீது
சுதந்திர சூரியன் கதிர் விரிக்கையில்
இந்த விழுப் புண்கள் இல்லாமற் போய்விடும்!

கூனிக் குறுகி குழந்தையாகி
அவரின் கண்களில் 'வெட்கம்'!

நச்சுக் காற்றையே அறுத்தெறிந்து
நாகசாக்கி, ஹிரோஷிமா- உலகின் உச்சியில்
வெற்றி விதைத்த போது
வெறும் தீயும் சாம்பலும்- என்னை
என் தேசத்தை அழிக்குமா?

நீங்கள் சொந்த நாட்டை மறந்து
சுயமிழந்து போய்
சேர்ந்த நாட்டின் புகழ்பாடும்
முகமூடி மனிதர்கள்!
உங்கள் பின்னால் வந்தால்
என் தன்மானம் சாகும்!
உயிரினும் மேலான தாய்மண் லாபம்
அதன் பின் வாழ்ந்து யாருக்கு லாபம்?



எனது சொந்தங்கள் எப்போது தொலைந்தன?
என் அண்ணா, அக்கா, தம்பி கூட
இங்கே தாய் மண் காக்க, துப்பாக்கி ஏந்தினர்
என் தேசம் எங்களுக்கே என்பதால்தான்!
ஏந்திய துப்பாக்கியும் சுதந்திர தாகமும்!
விரைவில் விடியல் சுதந்திரம் பிறக்கும்
அன்று நான் துள்ளி விளையாடுவேன்1
அதுவரை தன்மானம் இழந்தவர்களே! தள்ளி நில்லுங்கள்!!

தமிழ்த்தாய் வடிவில் ஒரு சின்னப்பெண் செல்ல
தடம் புரிந்த பெரிய குழந்தை பின்னே அடி வைத்தது.....

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சந்திப்பு

தயாரிப்பு:
**எஸ். பாலச்சந்திரன்**

கடந்த யூன் மாதம் ரொறன்ரோ, மிசுசாகா, மொன்றியால் நகரங்களில் RADIO ASIA 95 கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது ரோஜா வாசகர்கள் அறிந்ததே. நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய புகழ் பூத்த இலங்கை வானொலிக் கலைஞர்கள் வரணியூரான் S. S. கணேசபிள்ளை, "அண்ணை றைட்" புகழ் K. S. பாலச்சந்திரன், A. M. C. ஜெயசோதி மற்றும் கொழும்பு Fm 99 கீழைத்தேய வானொலி அறிவிப்பாளர் S. ஸ்ரீகரன் ஆகியோர் 'ரோஜா' சஞ்சிகைக்களித்த விஷேட பேட்டி...

K.S. பாலச்சந்திரன் அவர்களே உங்கள் கலை ஆர்வம் எப்படி உருவானது, கலைப்பிரவேசம் எவ்வாறு நிகழ்ந்தது?

எனது தந்தையார் இயல்பாகவே நகைச்சுவையாக பேசும் ஆற்றல் படைத்தவர். அவரின் பாதிப்பு என்னிடத்தில் நிறையவே இருந்தது. கொழும்பில் வேலை கிடைத்து வந்த பின், S. S. கணேசபிள்ளை (வரணியூரான்) T. ராஜேஸ்வரன் (திரைப்பட நடிகர்) எஸ். நடராஜ ஐயர் (வானொலி அறிவிப்பாளர்) ஆகியோர் பணியாற்றிய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலேயே பணியாற்ற நேர்ந்ததினால் கலைப்பிரவேசம் இலகுவாகியது. நான் கொழும்பில் நடித்த முதலாவது மேடைநாடகம் மறைமுதல்வன் என்பவர் எழுதிய 'முகப்பாத்திதான்' என்பதுதான்.



உங்கள் கலைப்பயணத்தில் நீங்கள் சந்தித்த கலைஞர்கள், உங்களுக்கேற்பட்ட அனுபவங்கள் பற்றி ரோஜா சஞ்சிகை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?

நான் கலை உலகில் பிரவேசித்த காலம், இலங்கையில் தமிழ் மேடை நாடகத் துறையின் 'பொற்காலம்'. அற்புதமான கலைஞர்கள். அவர்களில் யாரைக் குறிப்பிடுவது என்று தெரியவில்லை. பார்வதி பரமசிவம் நாடகத்தில், தாயாகவும், இளம் பெண்ணாகவும் மாறி மாறி நடித்த சுப்புலட்சுமி காசிநாதன், 'தணியாத தாகம்' வானொலி நாடகத்தில் யோகமாக நடித்த விஜயாள் பீட்டர், பாலேந்திரா மேடையேற்றிய 'கண்ணாடி வார்ப்புகள்' நாடகத்தில் தாயாக நடித்த நிர்மலா, இவர்களின் நடிப்பு என் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கிறது. தில்லையூர் செல்வராஜனின் 'தணியாத தாகம்' நாடகத்தில் நான் சோமுவாக நடித்த பொழுது, மலை மலையாக வாரந்தோறும் குவிந்த நேயர் கடிதங்களில் ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு வயோதிபர், இவ்வாறு எழுதியிருந்தார்.

"இறுதி அங்கத்தில் யோகம் இறந்துவிடுவா என்று இங்கு கதைக்கிறார்கள். அவ்வாறு செய்து விடாதீர்கள். அப்படி நடந்தால் இருதய நோயாளியான எனக்கு எதுவும் நிகழலாம்." நடுங்கிய கையெழுத்தில், அவரது கடிதத்தை வாசித்த, 'தணியாத தாகம்' குழுவினர்களாகிய நாங்கள் மெய்சிலிர்த்தோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடைக்காற்று என்னும் ஈழத் திரைப் படத்தில் கதாநாயகனாக நடித்துள்ளீர் கள். முதல் முதலில் கமெராமுன் நின்ற போது உங்கள் மனோநிலை எப்படி இருந்தது?

*'வாடைக்காற்று' திரைப்படத்தில் நான் நடித்த பாத்திரமான 'விருத்தாகலம்' தனது மைத்துனியிடம், தன் மனதைத் திறந்து விருப்பத்தை தெரிவிக்கும் உணர்ச்சிமிக்க கட்டம்தான் , நான் நடித்த முதலாவது காட்சி. உடன் நடித்தவர் என்னுடன் வானொலியில் பல வருடங்களாக இணைந்து நடித்த ஆனந்தராணி பாலேந்திரா. எனவே முதன் முதலாக கமெராமுன் நின்ற பொழுது, பெரிய பரபரப்பு எதுவும் இருக்கவில்லை. ஒருவருக்கொருவர் சளைக்காமல் நானும், ஆனந்தராணியும் அக்காட்சியில் நடித்தோம்.*

"அண்ணை றைட்" எனும் தனி நடிப்பை நீங்கள் அறிமுகம் செய்து வைத்ததன் காரணம் என்ன?

*எங்கள் ஊரான கரவெட்டி கிராமத்தி னூடாக பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பஸ் செல்லும். எங்கள் பிரயாணங்கள் அனேகமாக அந்த பஸ்சில்தான் நிகழும். அந்த பஸ் நடத்துனர்களின் பேச்சும், நடவடிக்கைகளும் என் கவனத்தை கவர்ந்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை. 1973ம் ஆண்டு, இலங்கை வானொலி யின் 6ம் இலக்க கலையகத்தில், ரசிகர்கள் முன்னணியில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட 'மத்தாப்பு' நிகழ்ச்சியில், 'அண்ணை றைட்' என்ற தனிநடிப்பு நிகழ்ச்சி அரங்கேறியது. தயாரிப்பாள ராக இருந்த கே. எம். வாசகர் திடீ ரென்று, இப்படி ஒரு நிகழ்ச்சியை செய்யச் சொல்லி பணிக்க, இலங்கை வானொலியின் சிற்றுண்டிச்சாலையிலி ருந்து, குறிப்புக்களை தயாரித்துக் கொண்டு அரங்கேறிய, 'அண்ணைறைட்' 1974ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அகில உலக தமிழாராய்ச்சி மகாநாட் டில் 9 நாட்கள் தொடர்ச்சியாக நிகழ்த் தப்பட்டதும், ஒளிப்பதிவாக வந்து வர வேற்பைப் பெற்றதும், உலக நாடுகள் பலவற்றில் என்னை கலைஞனாக நிலைநிறுத்தியதும் வரலாறு.*

ரோஜா வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

*எங்கள் மொழியை, எங்கள் மண்ணை, பாரம்பரியத்தை, விழுமியங்களை, அடுத்த தலைமுறையினருக்கு அழிக்கப் பட முடியாத சொத்தாக வழங்குங்கள். இன்றேல் 'வேர்கள்' அறுந்து போய் விடும் ஆபத்து நேரலாம். அது நிகழ்ந் தால் தமிழ், பெயர்களில் மட்டுமே நிலைக்கும் நிலை வரலாம். அதைவிட சோகம் வேறு என்ன இருக்க முடியும்.*

*இன்னுமொரு வார்த்தை; அழகிய அமைப்பில், கருத்தாழமிக்க படைப்புக் களுடன் மலரும் 'ரோஜா' இதழைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டி யது. வாசகர்களே, இத்தகைய படைப் புக்களுக்கு, நம்மவரின் ஆக்கங்களுக் குக் கைகொடுங்கள். 'எரிநட்சத்திரங் களாக' போய் விடாமல் விண்ணில் மிதக்கும் முழு நிலவாக நின்று நிலைக்க செய்வது உங்கள் கடமை என்று கூறி, உங்கள் அனைவருக்கும் இந்தக் கலைஞன் நல் வந்தனங்கள் கூறி விடைபெறுகிறேன் நன்றி. வணக்கம்!*



ஸ்ரீகரன் அவர்களே உங்கள் Fm 99 கீழைத்தேய வானொலிக்கும், Radio Asia வானொலிக்கும் உள்ள ஒற்றுமை என்ன? வேற்றுமை என்ன?

*Radio Asia வில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சி கள் யாவும் பயனுள்ள கருத்துக்களை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் வண்ணம் தொகுக்கப்படுகின்றன. அத்துடன் பாடல்களுக்கு முக்கியத்துவம் குறைவாகவும், கலைப் படைப்புக்களுக்கு முக்கியத்துவம் கூடுதலாகவும் இருக்கிறது.

ஆனால், எமது *Fm 99* வானொலியோ *more music, less talk* என்னும்கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. இருந்தும் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. *S.* தில்லைநாதன் அவர்கள் பல பயனுள்ள நிகழ்ச்சிகளை நேயர்களுக்கு வழங்குவதில் மிகவும் அக்கறை கொண்டவர்.



ஜெயசோதி அவர்களே, ஒரு நடிகையாக நீங்கள் உருவானதெப்படி?

பாடசாலை வாழ்க்கையில் ஐந்து ஆறு நாடகங்களில்தான் நடித்தேன். அதனில் ஒன்று நாடகப் போட்டி நாடகமாகும். அந் நாடகத்தில் நடித்து யாழ் மாவட்டப் பார்வையாளர்களின் பெரும் பாராட்டைப் பெற்று பாடசாலைக்கும் புகழ் சேர்த்துக் கொடுத்தேன். யாழ் மண்ணில் படிப்பை முடித்து கொழும்பில் எனது மற்றச் சகோதரர்களுடன் வாழ்க்கையைத் தொடங்கினேன்.

எனது 2வது அண்ணாவுடன் வாய்ப் பேச்சு, அங்க அசைவு, முகபாவத்துடன் நகைச்சுவையாக கதைத்து மகிழ்ந்து எனது நேரத்தைக் கழிக்கும் நேரங்களிலெல்லாம் எனது அம்மா சொல்லுவா வீட்டினுள் நடிக்காமல் மேடையில் நடித்தீர்கள் என்றால் பிரயோசனம் என்று அடிக்கடி சொல்லுவா. அந்த நாட்களிலே அதாவது 1980ம் ஆண்டு தை மாதம் இலங்கை வானொலியும் நடிகர், நடிகை தேவை என 20 நாட்களாக கேட்டுக் கொண்டேயிருந்தது. சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதே என்று உடனடியாக விண்ணப்பம் செய்தேன். இரு தேர்வுகள் நடைபெற்றன. சித்தி பெற்றேன். 1981 தை மாதம் முதன் முதல் வானொலியில் கதம்பம் நிகழ்ச்சியில் நடித்தேன். எனது திறமையைக் கண்டு "முகத்தார் வீடு' என்னும் விவசாய நாடகத்தில் முகத்தாரின் மனைவி தெய்வானையாக நடிக்க விட்டார்கள். அதேநேரம் பற்பல நிகழ்ச்சிகளிலும் என்னை நடிக்க வைத்தார்கள். ரசிகர்களின் பாராட்டின் மூலமும், எனது தாயாரின் உந்துதலின் மூலமும் இறைவன் தந்த நடிப்புத் திறனால் நான் ஒரு வானொலி நடிகையானேன். அதனைத் தொடர்ந்து தொலைக் காட்சி மேடை நடிகையாகவும் ஆனேன்.

பொதுவாகப் பெண்கள் மேடையில் தோன்றி நடிக்கத் தயங்குவதுண்டு, ஆனால் நீங்கள் முன்மாதிரியாக மேடைகளில் நடிக்கக் காரணம் என்ன?

முதலில் கூறியபடி பாடசாலை நாடகமொன்றில் பங்கேற்றி பார்வையாளர்களினதும், மத்தியஸ்தர்களினதும் பாராட்டுத்தான் என்னை மேடையில் மீண்டும் அரங்கேற்ற வைத்ததற்கு மூலகாரணமாக இருக்கலாமென்று நினைக்கிறேன். அத்துடன் தாயாரின் வாக்கும் கூட. வானொலி நாடகவிழா 1982ம் ஆண்டு நடைபெற்றது. அதனில் வரணியூரானின் 'ஒருத்தருக்கும் சொல்லாதே' என்ற நகைச்சுவை நாடகத்தில் வேலைக்காரப் பெண்ணாக நடித்து அன்றைய தமிழ்ச் சேவைப் பொறுப்பாளர் பொண்மணி குலசிங்கம் உட்பட்ட எல்லோரினதும் பாராட்டைப் பெற்றேன். புகழைப் பெற்றேன். இந் நாடகவிழா கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றது. இதுவேதான் நான் தொடர்ந்தும் மேடையில் நடிப்பதற்கு அடிக்கல்லாக இருந்தது. சாதாரணமாகப் பெண்கள் மேடைக்கு வரமாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார்கள். வரவும் பெரும்பாலான பெற்றோர் விடவும் மாட்டார்கள். ஏனென்றால் தமது வாழ்க்கைக்கு ஒரு துணைவர் கிடைக்காமற் போய்விடுமே என்ற பயத்தினால். என்னைப் பொறுத்தவரை எனக்கு அந்த நோக்கமில்லை. வீட்டிலும் எதிர்ப்பு இல்லை. அத்துடன் கலைத்துறையில் ஈடுபட்டால்தான் கூடாத பெயர் வருவதென்றில்லை. ஏனைய துறைகளிலும் கூடாத பெயர் நன்றாகக் கிடைப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. ஏனோ கலைத்துறைதான் மக்களுக்கு கண்ணுக்குத் தெரிகிறது. நானுண்டு, கலையுண்டு. மற்றவரின் சொல்லுக்குப் பயந்தவளில்லை என்ற படியாலும், திறமையினாலும் இன்றும் மேடையில் தொடர்ந்து நடிக்கிறேன். கடல்கடந்து பல்லாயிரம் மயில்கள் சென்றும் மேடைகளில் ஒரு நடிகையாகத் திகழ்கிறேன்.

வெளிநாடுகளில் கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருக்கிறீர்கள் அப்போது ஏற்பட்ட மறக்க முடியாத சம்பவங்கள் பற்றி?

*எனது ஐரோப்பிய கலைப் பயணத்தில் டென்மார்க் நகரில் நடைபெற்ற எமது கலைநிகழ்ச்சியின் முடிவில் வழமைப் பிரகாரம் எல்லோரும் பாராட்டினார்கள். எல்லாம் முடிந்து புறப்படுவதற்கு ஆயத்தமான பொழுது தாய், தகப்பன், இரு பிள்ளைகள் என்னைத் தேடிவந்து, நீங்கள் பிரமாதமாக நடித்தீர்கள் என்று புகழ்ந்து, தமது இரண்டாவது கைக் குழந்தையின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றி எனக்குப் பரிசாகத் தந்தார்கள். இச் சம்பவத்தை என் வாழ்நாளில் என்றும் மறக்க முடியாது.*

*உங்களை கவர்ந்த இலங்கை வானொலி நடிகர்கள் யார்?*

*S. ஜேசுரட்னம், திலகா தில்லைநாதர், K.S. பாலச்சந்திரன், S. S. கணேசபிள்ளை, T. ராஜகோபால், கமலினி செல்வராஜன், செல்வம் பெர்னாண்டோ உட்பட பலர் இருக்கிறார்கள்.*

கணேசபிள்ளை அவர்களே நாடகத்துறையில் நீங்கள் பிரவேசித்ததன் காரணம் என்ன?

*கம்பன் வீட்டுக் கைத்தறியும் கவிபாடும் என்று சொல்வார்கள். அதேபோல என்னுடைய தந்தையார் ஒரு அண்ணாவியார் ஆக இருந்ததனால் என்னையறியாமலே இந்த நாடகத் துறையில் ஈடுபடும் சந்தர்ப்பம் கிட்டியது. செல்லையா அண்ணாவியார் என்றால் அந்தக் காலத்தில் அறியாதவர்கள் கிடையாது என்ற அளவிற்கு பிரபல்யமாகியிருந்தார்.*

*இத்துறையில் உங்களுக்கு குருவாக இருந்தவர் யார்?*

*பின்னர் நான் வானொலி நடிகனாக 1956ம் ஆண்டு சேர்ந்தபின் எனது குருவாக விளங்கியவர் லண்டன் கந்தையா என்றழைக்கப்படும் சண்முகநாதன் ('ச" அவர்கள்) இவருடைய உந்துதலில்தான் நான் ஒரு எழுத்தாளனாகவும் மிளிர முடிந்தது.*

இதுவரை எத்தனை வானொலி நாடகங்கள் எழுதி இயக்கியுள்ளீர்கள்?

*வானொலி நாடகங்கள் நாங்கள் எழுதுவது மட்டும்தான். அதை இயக்குவதற்கு அங்கே நாடகத் தயாரிப்பாளர்கள் இருக்கிறார்கள். இருப்பினும் வர்த்தக ஒலி பரப்பில் இடம்பெறும் நாடகங்களை நானே எழுதி இயக்கி நடிப்பதுண்டு தவிர மேடை நாடகங்கள் தொலைக் காட்சி நாடகங்கள் போன்றவற்றையும் நான் எழுதி நெறிப்படுத்தியுள்ளேன். சுருக்கமாகச் சொல்வதானால் ஆயிரத்திற்கு மேற்பட்ட வானொலி நாடகங்களையும் எழுதியிருக்கிறேன். ஒரேயொரு சினிமாவில் நடிப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அது "வாடைக் காற்று" திரைப்படமாகும்.*

நீங்கள் ஏற்று நடித்த பாத்திரங்களில் உங்களுக்குச் சவாலாக அமைந்த பாத்திரம் எதுவென்று கருதுகிறீர்கள்?

*சவால் என்று கூறமுடியாது. எனக்குப் புகழ் தேடித்தந்த நாடகம் என்று சொல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வதானால் "புழுகர் பொன்னையா" என்ற நாடகம். பாத்திரமும் புழுகர் பொன்னையா தான். இரைதேடும் பறவைகள் என்ற நாடகத்திலே வரும் 'காங்கேசு' என்ற பாத்திரமும், 'நம்பிக்கை' என்ற தொலைக்காட்சி நாடகத்தில் தபால்காரனாக வரும் பாத்திரத்தையும் குறிப்பிடலாம். சவால் என்று குறிப்பிடும் பொழுது எல்லா நாடகங்களிலும் வரும் பாத்திரங்களும் சவாலாக அமைந்து விடுகின்றன.

கனடாவாழ் தமிழ் மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

புலம் பெயர்ந்து கனடாவில் வாழும் தமிழர்கள் தமது மண்வாசனையை இன்னும் மறக்கவில்லை. நாங்கள் இந்த நிகழ்ச்சிக்காக கனடாவில் வந்திறங்கிய துமே ஏராளமான தொலைபேசி அழைப் புக்களாலும், நேரடியாக வந்து வாழ்த்தி யதன் மூலமும் தங்கள் அன்பை வெளி க்காட்டி எம்மை திணறடித்து விட்டார் கள். நாங்கள் வந்த நாள் தொடக்கம் இன்றுவரை எம்மைத் திணறடித்து விட்டார்கள்.

★★★






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராட்மன் - 87 NOT OUT

கிரிக்கட் உலகில் செஞ்சரி என்ற ஆங்கிலச் சொல் பின்னிப் பிணைந்து இருப்பது எல்லோரும் அறிந்த விடயமே. அப்படியான செஞ்சரியை அடிக்கடி போட்டவர், ஓட்டங்களைக் குவிக்கும் மனித இயந்திரம் என வர்ணிக்கப்படும் சேர் டொனால்ட் ஜோர்ஜ் பிராட்மன் ஆவார். ஆட்ட முறையில் தனக்கென்று ஒரு பாணியை அமைத்து, நுட்பமான முறையில் துடுப்பாடும் திறமை இந்த பிராட்மனுக்கே உண்டு என்பதை அவரது புள்ளி விபரம் உலகுக்கு கட்டியம் கூறுகின்றது.

நியூசவுத்வேல்ஸ் (New South Wales) அணிக்கு ஆடிய பிராட்மன், அவுஸ்திரேலியா டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டார். ஆரம்ப காலத்தில் அவர் எதிர்பார்த்தபடி ஓட்டங்களை எடுக்க முடியாமல் போய்விட்டது. கடின பயிற்சியின் பின் படிப்படியாக ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கினார். 21 வயதில் ஆடத் தொடங்கிய இவர் 40 வயதில் ஓய்வு பெற்றார். இக்கால இடைவெளியில் 52 டெஸ்ட் ஆட்டங்களில் கலந்து கொண்டார். உலக மகாயுத்தம் காரணமாக சில வருடங்கள் விளையாட்டு தடைப்பட்டிருந்தது. 80 முறை ஆடுகளம் சென்று 6996 ஓட்டங்களை 29 சதங்களின் துணையுடன் வளாசித் தள்ளினார். முதல் 20 இனிங்ஸ்களில் 112 ஓட்டங்களையும், அடுத்த 20 இனிங்ஸ்களில் 634 ஓட்டங்களையும், அடுத்த 20 இனிங்ஸ்களில் 1853 ஓட்டங்களையும், கடைசி 20 இனிங்ஸ்களில் 4337 ஓட்டங்களையும் எடுத்தார். அதாவது வயது முதிர அவரது ஆட்டத்தில் நிதானம் கூடியது, குறுகிய நேரத்தில் ஓட்டங்களைக் குவிக்கும் ஆற்றல் கூடியது. இங்கிலாந்திலுள்ள ஓவல் மைதானத்தில் தனது கடைசி இனிங்ஸ் விளையாட மைதானத்தில் புகுந்த போது, அரங்கத்திலிருந்த எல்லோரும் எழுந்து கைதட்டி தங்கள் அன்பைத் தெரிவித்தனர். இதனால் மிகவும் உணர்ச்சி வசப்பட்டுக் கண்ணீர் மல்க, தான் எதிர்கொண்ட முதலாவது பந்திலேயே ஆட்டமழக்க நேர்ந்தது. டெஸ்ட் பந்தயங்களில் ஆயிரத்



துக்கும் மேற்பட்ட பவுண்டரிகளை அடித்த இவரால் மேலும் நான்கு ஓட்டங்களை எடுக்க முடியாமல் போனது துரதிஷ்டமே. நான்கு ஓட்டங்களைப் பெற்றிருந்தால் அவரது சராசரி ஓட்ட எண்ணிக்கை 100 ஆக இருந்திருக்கும். 100 என்பது சராசரியின் உச்சம் என்பது நியதிபோலும். இவரது 99.9 என்பது முறியடிக்கப்பட முடியாத சாதனையாகும். டெஸ்டில் சராசரி 50 எடுத்த வீரர்களே மிக மிகச் சொற்பம்.

அணி ஒன்று 300 ஓட்டங்களை ஒரு நாளில் பெறுவது கஷ்டமான காலகட்டத்தில், இவர் தனி ஒருவராக ஆட்டமிழக்காது 309 ஓட்டங்களை ஒரு நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்திற்கெதிரான டெஸ்ட் இல் Headingly மைதானத்தில் பெற்றார். இவர் பெற்ற செஞ்சரிகள்ஒவ்வொன்றும் சராசரி யாக 162 நிமிடத்தில் பெற்றதாக புள்ளி விபரம் கூறுகின்றது. நேர்த்தியாக மட்டு மல்ல விரைவாகவும் ஓட்டங்களைப் பெறு வதற்கு பிராட்மன் இற்கு நிகராக எவரும் இல்லை என்றே கூறலாம்.

மொத்த எண்ணிக்கை 10 இலும் குறை வாக உள்ளபோது 15 முறை ஆடுகளத் திற்கு சென்ற பிராட்மனின் சராசரி 106.23. மொத்த எண்ணிக்கை 10இற்கும் 25 இற் கும் இடையில் உள்ளபோது 14 முறை உள் சென்ற இவரின் சராசரி 82.76. மொத்த எண்ணிக்கை 25 இலும் அதிக மாக இருந்த போது சராசரி 103.15. இவையெல்லாம், எந்தச் சந்தர்ப்பத்திலும் பந்து வீச்சாளர்களைத் திணறடிக்கும் வல்லமை உண்டு என்பதை ஊர்ஜிதமாக் குகின்றது.ஓவல் மைதானத்தில் பொன்ஸ் போர்ட் (Pons ford) உடன் ஜோடி சேர்ந்து எடுத்த 451ஓட்டங்கள் இன்னும் முறியடிக்க முடியாத சாதனையாக உள்ளது.

இவர் ஆடிய 80 இனிங்ஸ்களில் 50 ஐ இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, மேற்கிந் திய தீவுகளுக்கெதிராக அவுஸ்திரேலிய மண,ணிலும் மிகுதி 30 ஐ இங்கிலாந்து மண்ணிலும் ஆடியுள்ளார். இவரைவிட கூடுதலான செஞ்சரி அடித்த பெருமை இந்திய வீரர் சுனில் கவாஸ்கருக்கே உண்டு. கவாஸ்கர் 30வது செஞ்சரியை அடித்த போது முதலில் தொலைபேசி மூலம் பாராட்டியவர் பெருமைக்குரிய பிராட்மனே. அதற்கு கவாஸ்கர் அடக்க மாக கூறிய வார்த்தைகள் "இது சாதனை யல்ல, வெறும் நிறைவேற்றமே"

முதல் தர அட்டங்களில் 117 சதங்களின் துணையுடன் 28,067 ஓட்டங்களைக் குவித் துள்ளார். இவரது சராசரி ஓட்டம் 95.14 ஆகும். முதல் தர ஆட்டங்களில் சராசரி யாக 100 ஓட்டங்களைப் பெறுவதற்கு 142 நிமிடங்கள் மட்டுமே எடுத்துள்ளார்.

ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி 87 வயதைய டையும் இவர், கிரிக்கட் விளையாடும் இள மட்டங்களுக்கு பேரொசானாக இருந்து செஞ்சரி போட வேண்டுமென பிராத்திப்போமாக.

## *விளையாட்டுச் செய்திகள்*

*THREE W'S என வர்ணிக்கப்படும் மேற் கிந்திய தீவுகள் வீரர்களான WORELL, WEEKS, WALCOTT என்ற கிரிக்கட் ஜம்பவான்களில் முதல் இருவரும் 'SIR' பட்டம் கொடுக்கப்பட்டு முன்னர் கௌர விக்கப்பட்டனர். இவ்வருடம் அந்த கௌர வப் பட்டம் WILLIAM WALCOTT இற்கு மகாராணியால் வழங்கப்பட்டது. WAL-COTT கிரிக்கட் வாழ்விலிருந்து ஓய்வு பெற்று 35 வருடங்களின் பின் இப்பட்டம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.*

★★★

*இரண்டரை ஆண்டுகளுக்கு முன் டெனிஸ் உலகின் முதல்தர வீராங்கனை யான மோனிக்கா செலஸ் (MONICA SELES) இவ்வருடம் நடைபெறும் U.S. OPEN போட்டியில் கலந்து கொள்ள இருக்கின்றார். ஜேர்மனியிலுள்ள ஹம்பக் நகரில் ஸ்ரெபி கிராப் இன் ரசிகன் ஒருவ ரால் முதுகில் கத்தியால் குத்தப்பட்டதால் தொடர்ந்து ஆட்டங்களில் கலந்துகொள்ள முடியாமல் போய்விட்டது. சென்றமாத இறுதியில் Martina Navaratilova உடன் காட்சிப் போட்டியொன்றில் விளையாடி வெற்றியீட்டினார்.*

★★★

*அண்மையில் மேற்கிந்திய தீவுகள் கோஷ் டிக்கும், இங்கிலாந்து கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற மூன்றாவது கிரிக்கட் டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் கோஷ்டி இனிங்ஸ் வெற்றி பெற் றது. லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் இல் இங்கிலாந்து வெற்றி பெற்றது. 1957ம் ஆண்டின் பின் இங்கிலாந்து அணி லோட்ஸ் மைதானத் தில் மேற்கிந்திய தீவுகள் கோஷ்டிக்கு எதிராகப் பெற்ற முதலாவது வெற்றி இதுவாகும்.*

★★★

*இங்கிலாந்தில் இவ்வருடத்திற்கான கிரிக்கட் சீசனில, KENT அணிக்காக விளையாடி வரும் பிரபல இலங்கை டெஸ்ட் வீரர் அரவிந்த டி சில்வா 1000 ஓட்டங்களைப் பெற்ற முதலாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய திரைவானில் முதன்மை நட்சத்திரம் பத்மஸ்ரீ கமல்ஹாசன்



*சிவாஜி கணேசன், எம்.ஜி.ஆர் இருவருமே நடிப்புக்களில் சரித்திரம் படைத்தவர்கள். இவர்களுக்குப் பிறகு யார் என்ற கேள்வி எழாமல் இல்லை. கமல்ஹாசனும் ரஜனிகாந்தும் இன்றைய திரையுலகை சிறப்பாக ஆள்கிறார்கள். குறிப்பாக கமல்ஹாசனைப் பற்றி மட்டும் எடுத்துக் கொண்டால் அவர் சாதனையாளர் என்று கூறினால் அது மிகையில்லை.*

*"களத்தூர்க் கண்ணம்மா" படத்தில் இருந்து ஆரம்பித்து, நூறாவது படமான 'ராஜபார்வை' வழியாக சமீபத்தில் வெளிவந்து வெற்றி கரமாக ஓடிய 'தேவர்மகன்', 'மகாநதி' ஆகிய படங்கள் ஒவ்வொன்றும் சாதனை புரிந்திருக்கின்றான். இதில்ல 'அபூர்வ சகோதரர்கள்' படம் சாதனையின் சிகரம் என.றே கூறலாம். கமல்ஹாசன் தனது பல்வேறு வேலைகளுக்கு இடையில் நமது 'ரோஜா' இதழுக்காக பேட்டி அளித்தார். அதிலிருந்து சில பகுதிகள்.*

களத்தூர் கண்ணம்மா படம் நினைவிருக்கிறதா?

*நன்றாக நினைவிருக்கிறது. நான் ஏ.வி.எம் ஸ்டுடியோவில் ஓடிய நாட்களை எப்படி மறக்க முடியும். அமரர் ஏ.வி. மெய்யப்ப செட்டியாரின் அன்பு ஆசியும் பெற்ற நாட்களை மறக்கத்தான் முடியுமா? நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் மடியில், அவரது மகன் பிரபு, ராம்குமாரை விட அதிகநேரம் உட்கார்ந்து மகிழ்ந்ததை மறக்க முடியுமா? திரு. ஜெமினிகணேசன், சாவித்திரி இருவரும் என்னை தூக்கியதை மறக்க முடியுமா? இப்படி பழைய நாட்கள் எல்லாமே மறக்க முடியாதவை மனதை விட்டகலாதவை.*

உங்கள் குருநாதரைப் பற்றிய சில குறிப்புக்களை கூறுங்களேன்?

*சில என்ன பல குறிப்புக்கள் கூறிக்கொண்டே போகலாம். பல நாட்கள் அவரைப் பற்றி பேசும் அளவிற்கு அவரது சாதனை பெரியது. திரு. பாலசந்தர் படங்களில் நான் நடிக்கும் கால கட்டத்தில் பல விஷயங்களை கற்றுக் கொண்டேன். அவரது படங்களில் 'அபூர்வராகங்கள்', 'சொல்லத்தான் நினைக்கிறேன்', 'மூன்று முடிச்சு' ஆகிய படங்களை இன்றும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். பாடல்களுக்காகவே அவர் எடுத்த 'நினைத்தாலே இனிக்கும்' 'வறுமையின் நிறம் சிவப்பு' ஆகிய படங்கள் அவரது திறமைக்கு சான்றாக இன்றும் விளங்கிம் படங்கள். அவர் ஒரு சிறந்த இயக்குநர் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் ஒரு சிறந்த நடிகர் என்பது பலருக்குத் தெரியாத ஒன்று. மேடையிலே சிறப்பாக நடித்த பாராட்டுப் பெற்றவர்.*

'அபூர்வ சகோதரர்கள்' படத்தில் எப்படி குள்ளமாக நடித்தீர்கள்?

*இதுவரை சொல்லாத ரகசியத்தைக் கேட்கிறீர்கள். நான் குள்ளனாக நடித்த ஒவ்வொரு காட்சியும் பலமுறை யோசித்து திட்டமிட்டு எடுக்கப்பட்ட காட்சிகள். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு வகையாக இந்தக் காட்சிகளை எடுத்தோம். இப்படி காட்சிகளை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எடுக்க நாங்கள் பட்ட கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல. விலாவாரியாக சொல்ல இங்கு இடமில்லை என்பதால் நான் இங்கு இதை விவரிக்கவில்லை.*

உங்கள் திரைக்கதை, வசன, திறமையை பார்த்து ரசித்தோம், என்று படத்தை இயக்குவதா உத்தேசம்?

*எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் படத்தை இயக்க எனக்கும் விருப்பம்தான். ஆனால் நேரம்தான் பெரும் பிரச்சனையாக உள்ளது. மருதநாயகம் என்ற படத்தை நான் இயக்குவதாக இருந்தது. ஆனால் படம் முடிக்கவும் செலவைக் கணக்குப் பார்த்தால் அதிகமாக தோன்றியது. சரி இதன் தயாரிப்பை சற்று ஒத்திப் போடுவதாக தற்போது முடிவு செய்துள்ளோம். இதன் இடையில் வேறு ஒரு படத்தை டைரக்ட் செய்ய தீர்மானித்து வேலைகள் நடைபெற்று வருகின்றன. பொறுத்திருந்து பாருங்களேன்.*

உங்கள் மனைவி சரிகா கமல்ஹாசன் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கின்றார்?

*மிகவும் பிஸியாக இருக்கிறார். என்னைக் கவனிப்பதும், குழந்தைகளை பராமரிப்பதும் ஒருபுறம் இருந்தாலும், மற்றொரு மிகப் பெரிய விஷயத்தை முடிப்பதில் முனைந்துள்ளார். நடிகர் திலகம் சிவாஜியின் வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக வழங்க முடிவு செய்து உழைத்து வருகிறார்.*

வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்கு குறிப்பாக 'ரோஜா' வாசகர்களுக்கு உங்கள் செய்தி என்ன?

*தமிழர்களின் பெருமையை நீங்கள் வாழும் இடம் எங்கும் பரப்புங்கள். குறிப்பாக தமிழர்கள் விருந்தோம்பலில் புகழ் பெற்றவர்கள். அந்தச் செயலை செய்து உங்களுக்கு பெருமையை சேர்த்துக் கொள்க. நல்லதை செய்யுங்கள். சாதனையாளராக உயருங்கள். சாதித்தபின் தலைக்கனம் இல்லாமல் சர்வசாதாரணமாக வாழுங்கள். மருத்துவத்துறையில் திரு. அம்பாடி 17 வயதில் சாதித்ததைப் போல் எல்லாத் துறையிலும் தமிழர்கள் சாதிக்க வேண்டும் என்பதே என் ஆசை. 'ரோஜா' இதழ் சார்பாக உங்களை சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்கள்.*

*~ சாரதி ~*
*சிறப்பு நிருபர் (இந்தியா)*

சினிமா கேள்வி - பதில் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

## அதிபர் பொ. கனகசபாபதி மணிவிழா வைபவம் அடுத்த மாதம் 4ம் திகதி

ஈழத்தின் புகழ்பெற்ற கல்விமானும், சிறந்த தமிழறிஞரும், சமூகசேவையாளரும், தெல்லிப்பளை மகாஜன கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபரும், தற்போது நோர்த் யோக் கல்விச் சபையின் பல்கலாசார ஆலோசகராகப் பணிபுரிபவருமான உயர்திரு. பொ. கனகசபாபதி அவர்கள், அகவை அறுபதினை எய்துவதையொட்டிய மணிவிழாக் கொண்டாட்டம், அடுத்த மாதம் (செப்டம்பர்) 4ம் திகதி ரொறன்ரோவில் நடைபெறவுள்ளது. தமிழறிஞர்கள், கலைஞர்கள், இலக்கியகாரர்களை "வாழும்போதே கௌரவிக்க வேண்டும்" என்ற கொள்கையின் அடிப்படையில் இவ்விழா ஏற்பாடாகியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1 உ | த் | 2 தி | 3 யோ | க | ம் | |
| 4 வ | ரு | | 5 கு | சி | | | 6 வி |
| | | 7 மோ | ம | | 8 அ | ம் | சா |
| 9 போ | ன் | னா | லை | | 10 வ | ர | க |
| ய் | | லி | | 11 நி | தா | ன | ம் |
| 12 யா | 13 க | சா | லை | | 14 ர | 15 வா | |
| 16 மொ | ழி | | 17 ஓ | 18 ர | ம் | | 19 ஊ |
| ழி | வு | 20 அ | | கு | | 21 கெ | று |

ரோஜா வின்

# சொற் சிலம்பம்

## போட்டி இல: 4

குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று அதிஷ்டசாலிகள்:-

| | | |
|---|---|---|
| 1. **இ. ரமேஷ்** | (ரொறன்ரோ) | $50 |
| 2. **ச. கமலா** | (டொன்மில்ஸ்) | $25 |
| 3. **வ. நசீர்** | (ரொறன்ரோ) | $15 |

***உங்கள் பதில்கள் யாவும் ஆகஸ்ட் 30, 1995ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, 'ரோஜா' வின் முகவரிக்கோ அல்லது Faxக்கோ அனுப்பி வையுங்கள்.***

***ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.***

***சரியான பதில்களை எழுதும் அதிஷ்டசாலிகள் மூவருக்கான $50, $25, $15 பரிசில்களை 'எல். கிரிஷோத் ரைப்செட்டிங்' ஸ்தாபனத்தினரால் அனுப்பிவைக்கப்படும்.***


# வானொலி நிகழ்ச்சிகள்

| சங்கமம் | கீதவாணி | தமிழ்ச் சோலை | நற்செய்தி |
|---|---|---|---|
| AM 1320 KHz | CIRV 88.9FM | AM 1320 KHz | AM 1540 KHz |
| புதன் மாலை 9.00-10.00 | சனி காலை 8.00-10.00 ஞாயிறு காலை 6.00-8.00 | ஞாயிறு காலை | செவ்வாய் மாலை 10.00-10.45 |

## RADIO ASIA - 530 AM அலைவரிசையில்...

திங்கள் முதல் - வெள்ளி வரை
மாலை 8.30 - 10.00
சனி, ஞாயிறு :~ மாலை 9.00 - 10.00
'ராகப்பிரவாகம்', 'சங்கராபரணம்', 'தமிழ் ஒலி', 'குங்குமம்'

'தமிழரங்கம்':~ AM 1540 KHz - செவ்வாய் மாலை 10.45 - 11.30

## "தமிழோசை" 1320 AM அலைவரிசையில்...

வெள்ளி மாலை 10.30 மணி முதல்...
சனி மாலை 10.00 மணி முதல்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இடமிருந்து வலம்

1. ஒப்பு: ஒற்றுமை
4. நூற்றுக்கும் அதிகமான தமிழ் திரைப்படங்களில் நகைச்சுவை நடிகரான, அண்மையில் மரணமான, தயிர்வடையுடன் கூடிய நடிகர்.
6. அண்மையில் குருடிசை வந்த நாயகர். தமிழன் என்று சொல்லிடா தலைநிமிர்ந்து நில்லடா என மேடைகளில் கர்ஜித்து அண்மையில் மறைந்த முன்னாள் இலங்கை கல்வி அதிகாரி.
10. ஆதரவின்றித் தவிக்கும் அன்பு இல்லச் சிறார்களுக்காக 'ரோஜா' இதழ் நடத்திய நிகழ்ச்சி
15. நீர் வேட்கை: ஆசை
16. கிராமத்து மாமா
18. சகசம்: சாதாரணம்
19. தமிழீழத்தில் வீடுகளில் தோட்டங்களில் காணப்பட்ட ஒரு பறவை.
20. சைவ சமயத்தவரின் மூல மூர்த்தி
21. தென்னிலங்கையில் தமிழர் முஸ்லிம் மீது அண்மையில் அடாவடித்தனம் மேற்கொள்ளப்பட்ட இடம்.

### மேலிருந்து கீழ்

1. திருமதி பரம சிவன் இந்தத் தேவி
2. வியாபாரி
3. ஒன்டாரியோவின் புதிய முதல்வரை இப்படிக் கூப்பிட்டால் திரும்பிப் பார்ப்பார்
4. குழம்பியுள்ளது ஒரு மிருகம். மனிதரும் எதற்கும் பயன்படாது குழம்பியிருந்தால் இப்படி அழைக்கப்படும்.
5. ஆகாயம்: மேலுலகம்: வாயுமண்டலம்:
7. கங்கை கொண்டான் கடாரம் வென்றான் என்பதில் உள்ள பர்மா நாடு
10. சாட்சி: நிரூபணம்: எடுத்துக்காட்டு
11. சிவாஜி கணேசன் நடிப்பில் வெளிவந்த கடைசிப்படம்.
12. மரணத்தின் பின் வாழும் இவர்களது நினைவு தினம் யூலை-5 என தமிழீழ பகுதிகளில் அனுஷ்டிக்கப்படும்.
14. விம்பிள்டனுக்கு பல்லாயிரக்கணக் கானவரை கவர்ந்திழுக்கும் பந்தயம்

### கீழிருந்து மேல்

8. கனடாவில் வெளிவரும் பல பத்திரிகைகள் சஞ்சிகைகளின் பெயர்களை வடிவமைத்தவர் இவர்.

### வலமிருந்து இடம்

9. மூன்று பக்கம் தரை சூழ்ந்த கடற்பகுதி

### இறுதி எழுத்தை இழந்தவை

(இ - வ)

13. மா. பின்பக்கத்தில் ஒட்டினால் பயனின்றி யிருக்கும் அல்லது வேலையில்லாமல் இருக்கும்.

(மே - கீ)

17. மி இல்லாத கப்பலோட்டி

ரோஜா வின்
**சொற் சிலம்பம்**
போட்டி
இல: 5
தயாரிப்பு:
எஸ். ஜெகதீசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

திருமணம், பதிவு திருமணம் மற்றும் இந்துமத கிரியைகள் சேவை

## சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்

(புங்குடுதீவு - 10 இலங்கை)
கனேடிய திருமணப் பதிவு அதிகாரி




அனைத்து இந்து மத கிரியைகளையும் வேதாகம விதிப்படி செய்து கொள்வதற்கும் மற்றும் திருமணத்திற்கு தேவையான முத்து மணவறை, மண்டப அலங்காரம், பூமாலை, சடைநாகம், தலைநகை செற், தலைப்பாகை, கல்யாண பூஜைக்குரிய பொருட்கள் என்பவற்றையும் பெற்றுக்கொள்வதற்கும், சைவ உணவுச் சேவைக்கும்.

243 Marguerretta Street
Toronto, ON. M6H 3S4
(at Bloor & Landsdowne)
(416) 534-0011

1247 Ellesmere Road
Scarborough, ON.
M1P 2X8
(416) 750-7319



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org